

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 23ம் நாள் (08-08-2025 வெள்ளிக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



## அலங்காரா! நல்லூரா!

தென்னாடு திங்கள் இதழின் ஐந்தாண்டு நிறைவு - அறுபதாவது சிறப்பிதழ்

படம் : சந்துரனாசா நிதர்சன் (GL Thushan)

ஆழித் திருவோணத்தில் பொன்னகவை காண்கிறார் தென்னாடு முதல்வர்





# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org


**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் - தலைமை ஆசிரியர்,**
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




## ஐந்தாண்டு நிறைவில் தென்னாடு திங்கள் இதழ் - தொடரும் அறிவியல் மரபு

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின், திங்கள் இதழான **"தென்னாடு"** தொடர்ந்து ஐந்து வருடமாய் பன்னிற வடிவமைப்பில் இறைவன் திருவருளால் வெளிவந்து கொண்டிருக்கிறது. மின் ஊடகங்கள் இருக்கின்றன அப்படி இருந்தும் அச்சு ஊடகம் தேவையா என்ற கேள்வி பலரால் எழுப்பப்பட்டாலும், பாடசாலை மாணவர்களை கருத்தில் கொண்டு நான் இந்தப் பணியை ஆரம்பித்து தொடர்ந்து கொண்டிருக்கிறோம்.

உலகம் முழுவதும் உள்ள, சைவத் தமிழர்களுக்கு பிறமொழிக் கலப்பற்ற தெய்வத்தமிழ் இதழ் ஒன்றின் தேவை இருப்பதை திருவருள் உணர்த்தியதன் வண்ணம், எங்கள் மடத்தினால் இந்த இதழ் ஆரம்பிக்கப்பட்டது. இயன்றளவு நாங்கள் பிறமொழிக் கலப்பற்ற வகையில் தமிழர் பண்பாடு, தத்துவம், வழிபாடு, வாழ்வியல், வரலாறு, இலக்கியம் போன்றவற்றில் உள்ள எங்கள் தொன்மை பெருமைகளை வெளிப்படுத்தவும் மேலும் அவற்றை அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்தவும் ஒரு ஊடகம் தேவை என்ற நோக்குடனும், சைவத் தமிழ் வரலாற்று நிகழ்வுகளை மற்றும் எங்கள் மடத்தின் செயற்பாடுகளை ஆவணப்படுத்தும் நோக்குடனும் எங்கள் இதழ் இயங்கி வருகிறது.

சைவம் மற்றும் தமிழன் பெருமைகளை வேற்று மொழியாளர்களும் அறியும் வண்ணம், குறிப்பாக நாயன்மார் வரலாறுகள், சைவ சித்தாந்தத் தத்துவங்கள், திருமுறைகள் மற்றும் அவற்றின் சிறப்புகள், மற்றும் சைவச் செய்திகள் கருத்துக்கள் போன்றவற்றை ஆங்கிலத்திலும் எழுதி வருகிறோம். இதில் முற்றுமுழுதாக புலம்பெயர் இளம் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இதில் எங்கள் மடத்தினைச் சார்ந்த ஆசிரியர்கள், இளம்புலவர், வரலாற்று ஆய்வாளர், அடுத்த தலைமுறை ஆசிரியர்கள், ஆங்கில இதழ் ஆசிரியர்கள், புராண ஆசிரியர், சித்தாந்த அறிஞர்கள், வடிவமைப்பாளர், அச்சகத்தார் என பலரின் பங்கும் சேர்ந்து ஒரு குழு முழுமையாக இயங்கிவருகிறது. அத்துடன் முன்னைய காலங்களில் மன்னர்கள் உதவியது போல்தற்போது பலர் நிதியுதவி செய்து வருகின்றனர். அனைவருக்கும் தென்னாடு மடத்தின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறான பல இதழ்கள் காலத்திற்கு காலம் வந்து கொண்டு தான் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப்படும் இந்து சாசனம், இந்து மாமன்றத்தினால் வெளியிடப்படும் இந்து ஒளி, சந்நிதி ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் ஞானச் சுடர் (330ஆவது மலர்), மற்றும் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களினால் ஆண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படும் மலர்கள், கோவை மணிவாசகர் அருட்பணி பணிமன்றத்தின் சமயத்தமிழ் (சிவ.சென்னியப்பன் ஐயாவின்), திருவாவடுதுறை ஆதீனத் திங்கள் இதழ் மெய்கண்டார், மதுரை ஆதீனத்தின் தமிழகரன் என்று இன்றும் சைவம் சார்ந்த மலர்கள் வந்துகொண்டு தான் இருக்கின்றன. இந்த மரபு எக்காலத்திலும் தொடர எல்லாம் வல்ல சிவபரம்பொருள் முன்னின்று உதவவேண்டும் என்று விண்ணப்பம் வைக்கும் அதேவேளை நாங்களும், இனி வரும் சமுதாயமும் இவ்வாறான அரும்பணிகளை தொடர பொருளுதவி அளித்து வலுப்படுத்த வேண்டும் என்றும் பேரன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.




# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(10-07-2025) - மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 26ம் நாள் நிறைமதி அன்று (10-07-2025 வியாழக்கிழமை) ஐம்பத்து ஒன்பதாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை புதிய அதிபர் (அன்றைய பதில் அதிபர்) திருமதி. லதானந்தினி சிவபாதம் அவர்கள், கொக்குவில் மேற்கு மணியர்பதி அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் முன்னாள் தலைவர் அவர்கள் மற்றும் அடியார்கள் பலருடன் எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் அவர்களும் இணைந்து கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் எங்கள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் அவர்கள், மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென்னாட்டின் ஐம்பத்து ஒன்பதாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார். தொடர்ந்து ஏனையோர்களுக்கு இதழ்கள் வழங்கி வைக்கப்பட்டு அடியர்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தது.

(11-07-2025) - ஈழத்தில் பல சைவப்பணிகளுக்கு பெருமளவிலான நிதிப் பங்களிப்புகளை செய்து, அருட்பணி ஆற்றிவரும் ஒசுத்திரேலியாவை சேர்ந்த வைத்திய நிபுணர் மனோமோகன் சிவகௌரி தம்பதிகள் தென்னாட்டிற்கு வருகை தந்து ஐம்பூதநாதர் திருக்கோயிலில் வழிபாடு செய்திருந்தனர். (14-07-2025) – யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் புதிய அதிபர் திருமதி. லதானந்தினி சிவபாதம் அவர்களின், பதவியேற்பு விழாவில் தென்னாடு சைவ மாணவர் சபையினர் கலந்து கொண்டு, புதிய அதிபர் அவர்களை கௌரவித்து வாழ்த்துரையையும் வழங்கியிருந்தனர்.

(13-07-2025) - சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச் செல்வர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி சிவத்திரு. ந. சிவபாலகணேசன் ஐயா அவர்கள் மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 29ம் நாள் (13-07-2025 ஞாயிற்றுக்கிழமை) தேய்பிறை மும்மை பிறைநாளில் சிவப்பரம்பொருளின் பாதங்களைச் சென்றடைந்தார். அவரது இறுதிக் கிரியை நிகழ்வில், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சார்பில் சிவத்திரு. தென்னாடு நிலவன் அவர்கள் கலந்து கொண்டு, தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தினால் வெளியிடப்பட்டிருந்த, ஐயா அவர்களின் சிவப்பேறு குறித்த செய்தியையும் உரையாக வழங்கியிருந்தார்.

(24-07-2025) - ஆடி மறைமதி வழிபாடுகள் திருமஞ்சனத்துடன் சிறப்பாக இடம்பெற்றன. அன்றைய தினம் அடியார்கள் பலரும் கலந்துகொண்டு, தங்கள் முன்னோர்களுக்கான நீத்தார் கடன் வழிபாடுகளை நிறைவேற்றிருந்தனர். வழிபாடுகளைத் தொடர்ந்து அடியார்களுக்கு அமுது செய்வித்தலும் இடம்பெற்றிருந்தது. (28-07-2025) - ஆடிப்பூர நன்னாள் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. அடியார்கள் மனோன்மணி அம்மனுக்கு திருமஞ்சனம் ஆற்றி, திருவிளக்கு வழிபாடுகளையும் ஆற்றினார். (01-08-2025) - சுந்தரர் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (06-08-2025) - ஆடித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்

# பேரரசர் இராசேந்திர சோழனின் ஆடித் திருவாதிரைப் பிறந்தநாள் விழாவில் சோழப் பெருமையை உலகறிய உரைத்த பிரதமர் மோடி அவர்கள்



அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற சோழப் பேரரசர் இராசேந்திர சோழனின் ஆடித் திருவாதிரைப் பிறந்தநாள் விழா, தமிழர் பண்பாட்டு பெருமைகளை உலகமே மறு முறை உணர்ந்த உன்னத தருணமாக அமைந்தது. இவ்விழாவானது **இராசேந்திர சோழனின் 1005-வது பிறந்தநாளாகிய ஆடித் திருவாதிரை நாள், கங்கைகொண்ட சோழபுரக் கோயில் கட்டத்தொடங்கிய 1000-வது ஆண்டு, மேலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது அவரது கடல் வழிப் படையெடுப்பின் 1000-வது ஆண்டு** ஆகியவை ஒரே நாளில் வருவதால், கடந்த 23-07-2025 தொடக்கம் முப்பெரும் விழாவாக மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் கடந்த 27-07-2025 அன்று கலந்து கொண்ட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், வாரணாசியிலிருந்து கங்கை நதியின் புனித நீரை கொண்டு வந்து, கங்கைகொண்ட சோழபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பிரகதீசுவரருக்கு அர்ப்பணித்து, மாமன்னர் இராசேந்திர சோழனின் மரபை மீட்டுருவாக்கம் செய்திருந்தார். கங்கை நீரில் பிரகதீசுவருக்கு திருமஞ்சனம் செய்து, செந்தமிழ் வழிபாட்டிலும் கலந்து கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற விழாவில், இராசேந்திர சோழனின் நினைவு நாணயத்தை வெளியிட்டு உரையாற்றிய பிரதமர், சோழர்களின் பெருமையை உலகறிய உரக்கக் கூறினார். அவரது உரையில்,



- தமிழர் வரலாறு, கலாச்சாரம், ஆன்மீகச் சிறப்பு ஆகியவற்றின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் **'சைவ சித்தாந்தமும், சோழர்களின் கோயில் கலைகளும்'** என்ற மிகச் சிறந்த கண்காட்சியை கண்டு வியந்ததாகவும், சோழர்காலக் கலை பெருமிதத்தில் ஆழ்த்துவதாகவும் தெரிவித்தார். சோழர்களின் ஆட்சி பொற்காலங்களில் ஒன்று என புகழ்ந்த பிரதமர், நீர் மேலாண்மையின் முன்னோடிகள் சோழர்களே எனக் குறிப்பிட்டார்.
- சோழர்களின் சிறப்புகளை வரும் தலைமுறையினர் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும் என தெரிவித்த அவர், இராசராச சோழனுக்கும், அவரது மகன் இராசேந்திர சோழனுக்கும், தமிழ்நாட்டில் பிரம்மாண்ட சிலைகள் மத்திய அரசின் சார்பில் அமைக்கப்படும் என உறுதியளித்தார்.
- தமிழ்நாடு சைவ சமயத்தின் மையமாகத் திகழ்வதற்கு, சோழர்களின் சிவபத்தி தான் காரணம் எனக் குறிப்பிட்டார்.
- சைவ சித்தாந்தத்தில் ஆடல்வல்லான் சிவன், தத்துவத்தின் பரப்பிய விளக்கமாக விளங்குவதையும், இந்த தத்துவ மரபு கடந்த 200 ஆண்டுகளாக பேசப்படாதபடி இருந்ததை இன்று தாங்கள் மீண்டும் பேசத் தொடங்கியுள்ளதாகவும் கூறினார்.
- சைவ சித்தாந்தம் வாழ்வியல் பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கிறது என்பதை உலகிற்கு எடுத்துரைத்து, பாரத தத்துவ வரலாறு ஆகம வழிப் பாரம்பரியத்துடன் திருத்தி எழுதப்பட வேண்டியது என்றும் வலியுறுத்தினார்.
- 1947ஆம் ஆண்டு இந்திய சுதந்திரப் போரில், திருவாவடுதுறை ஆதீனத்தால் செங்கோல் வழங்கிய நிகழ்வை நினைவுகூர்ந்தார் மேலும் 2023இல் அதன் மறுஅமைப்பாக நாடாளுமன்றத்தில் செங்கோல் நிறுவப்பட்டதை, பெருமையுடன் எடுத்துரைத்தார்.



- **"சிவனை வணங்குபவன், சிவனிலேயே கரைந்து விடுகிறான்"** என்று உருக்கமாக கூறிய பிரதமர், பாரத மக்களின் நலனுக்காக சிவனிடம் வேண்டுதல் வைத்ததாக பகிர்ந்தார்.
- **"நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க"** என சிவபெருமானை வாழ்த்திப் பாடிய ஓதுவார்களின் பாடலும், இளையராஜாவின் இசையும், அவர் ஆன்மாவை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதாகவும் கூறியிருந்தார்.

பேரரசன் இராசேந்திர சோழனின் 1005-வது ஆடித் திருவாதிரை பிறந்தநாளில் இடம்பெற்ற இந்த விழா, தமிழரின் சைவ பாரம்பரியத்தை, சோழர் வரலாற்றை, தத்துவப் பண்பாடுகளை, நாடெங்கும் மட்டும் அல்லாது உலகெங்கும் மீளச் சுடர்விட்ட நிகழ்வாக அமைந்தது.

திருச்சிற்றம்பலம்

# கோயில் நகரங்களை சிறப்பு கலாசார மண்டலங்களாக அறிவிக்க வேண்டும்
# பிரதமரிடம் தருமபுரம் ஆதீனம் வேண்டுகோள்



*கங்கைகொண்டசோழபுரத்துக்கு கடந்த 27-07-2025 அன்று, வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம், தருமபுரம் ஆதீனம் 27வது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கோரிக்கை மனுவொன்றை வழங்கியிருந்தார்.*

*அதில், தமிழக கோயில் நகரங்களை சிறப்பு கலாசார மண்டலங்களாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியிருந்தார். அந்த மனுவில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:*

- **மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி சட்டநாதர் கோயில் வளாகத்தில் கடந்த 2023-ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்புத் தகடுகள், கல்வெட்டுகள் கி.பி 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சைவ இலக்கியமான தேவாரத்தில் உள்ள பாடல் வரிகளைக் கொண்டுள்ளன. அவற்றை தருமை ஆதீனம் பாதுகாத்து ஆய்ந்து வெளியிட மத்திய அரசு ஆதரவளிக்க வேண்டும்.**

- **ஓதுவாமூர்த்திகளின் இசைத்தொண்டு சைவ மரபில் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த தனித்துவ மிக்க இறைபத்தி நிறைந்த தமிழிசை கலாசார பாரம்பரியத்தை ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பின் (UNESCO) பிரதிநிதித்துவ பட்டியலில் சேர்க்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

- **13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மெய்கண்டார், சைவசித்தாந்த மரபின் அடித்தளத்தை அமைத்த சிவஞான போதத்தின் ஆசிரியர் ஆவார். அவர் தோன்றிய திருவெண்காட்டில் 150 அடி உயரத்தில் அவருக்கு சிலை நிறுவ வேண்டும்.**

- **தருமை ஆதீனத்தின் 4-ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிகர் மதமாச்சரியங்களுக்கு எதிராக சனாதன தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டு சிறி குமரகுருபரரை காசிக்கு சென்று மடம் அமைக்கப் பணித்தவர். அவரை கௌரவிக்கும் பொருட்டு வாரணாசியின் முக்கியச் சாலைகளில் ஒன்றுக்கு மாசிலாமணி தேசிகர் எனப் பெயர் சூட்ட வேண்டும்.**

- **தமிழகத்தில் கோயில் நகரங்களான தில்லை (சிதம்பரம்), திருவாரூர், மயிலாடுதுறை, கும்பகோணம், மதுரை, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை ஆகியவை சமய ஞானம், மெய்யறிவு, பாரம்பரிய இசை மற்றும் தொன்மைசார் விழாக்களைக் கொண்டதாகத் திகழ்கின்றன. இக்கோயில் நகரங்களைப் பாதுகாக்கும் பொருட்டு சிறப்பு கலாசார மண்டலங்களாக அறிவிக்க வேண்டும்.**

- **சைவ ஆகமங்கள் தமிழகத்தின் பாரம்பரியமிக்க கோயில் கட்டடக் கலை, திருவிழாக்கள் மற்றும் அவற்றின் உள்ளீடாக விளங்குகின்றன. எனவே, சைவ ஆகமங்களை கல்வி நிலையங்களில் ஆய்வுக்குரிய பாடங்களாக அமைக்கவும், வேத ஆகம பாடசாலை அமைத்தும், பல்கலைக்கழகங்களில் ஆய்வு இருக்கைகளுக்கு வழிவகை செய்ய வேண்டும். அத்துடன், சைவ ஆகம நூல்களை இணையப் பதிப்பாக கொண்டு வர வேண்டும் எனவும் தெரிவித்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**திருச்சிற்றம்பலம்**

# முப்பத்துமூன்றாம் ஆண்டு தெய்வச் சேக்கிழார் விழா




சைவ சமயம் தழைத்தோங்க தன்னலமற்று உழைத்த திருத்தொண்டர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்தி, பத்தி நெறியையும் தொண்டு நெறியையும் போற்றி, வாழ்வியல் நெறியை முடிவாக காட்டவல்லது பெரியபுராணம். இத்தகைய மாபெரும் இலக்கியச் செல்வத்தை நமக்கு அளித்த சேக்கிழார் பெருமானுக்கு, சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் ஆண்டுதோறும் கவின்மிகு விழா எடுத்து வருகிறது.

அந்தவகையில் இவ்வாண்டு சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சிறி இராமச்சந்திரா மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகமும் இணைந்து, 33-ம் ஆண்டு தெய்வ சேக்கிழார் விழாவை சென்னை திருவான்மியூர் இராமச்சந்திரா கன்வென்ஷன் மையத்தில், கடந்த திங்கள் 24,25,26,27ம் தேதி ஆகிய நாட்களில் சிறப்பாக நடத்தியிருந்தது.

இவ்விழாவின் இரண்டாம்நாள் நிகழ்வாக தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் மணி விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். நிகழ்வில் தருமை ஆதீன புலவர் சி.அருணைவடி வேல் எழுதிய **'தென்றமிழ் பயன்'** நூல் வெளியிடப்பட்டது. நூலின் முதல் பிரதியை தருமபுரம் ஆதீனம் வெளியிட, திருக்கயிலாய பரம்பரை திருவண்ணாமலை ஆதீனம் 46-வது குருமகா சந்நிதானம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் தருமபுர ஆதீனம் தலைமையேற்று அருளாசி வழங்கி பேசியபோது, சேக்கிழார் நமக்கு கொடுத்த பெரிய கொடை, பண்பாட்டு பெட்டகம் பெரியபுராணம். நாயன்மார்கள் ஒவ்வொருவரும் தனித்தனி தொண்டுகளை செய்துள்ளனர். தொண்டுக்கு தடங்கலோ, இடையூறோ வரும் சூழலில், உயிரை மாய்த்துக் கொள்வார்களே தவிர, பின்வாங்கியது இல்லை. அதனால்தான் பெரியவர்களாக உயர்ந்தனர். அந்த புராணமும் 'பெரிய புராணம்' என பெயர் பெற்றது. பட்டிதொட்டிதோறும் சென்று நாயன்மார்களின் வரலாற்றை காலத்தோடு தொகுத்து ஒரு நூலை கொடுக்கும் சீரிய பணியை சேக்கிழார் பெருமான் செய்துள்ளார். பெரிய புராணம் இல்லாவிட்டால், தமிழகத்தின் பண்பாடு இன்று உலக அளவில் தெரிந்திருக்காது. இவ்வாறு அவர் பேசினார்.

தணிகைமணி ராவ்பகதூர் வ.சு.செங்கல்வராயரின் **'சிவாலய தேவார ஒளிநெறி மற்றும் கட்டுரைகள் - 15 நூல்களின்'** ஆய்வரங்கமும் நடைபெற்றது. நிகழ்ச்சியில், பெருங்குளம் செங்கோல் மடத்தின் 103-வது ஆதீனம் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான சுவாமிகள், திண்டுக்கல் சிவபுரம் ஆதீனம் திருநாவுக்கரசு தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சேக்கிழார் ஆராய்ச்சிமைய தலைவர் நீதிபதி எஸ். ஜெகதீசன், செயலாளர் சிவாலயம் ஜெ.மோகன், தஞ்சை தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி, தமிழ் தொல்லியல் அறிஞர் சித்ரா கணபதி, தருமை ஆதீன புலவர்கள் அருணை பாலறாவாயன், தெ.முருகசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் மூன்றாம்நாள் நிகழ்வில் திருவருட்பா மூலமும், தமிழறிஞர் ஔவை சு.துரைசாமி பிள்ளையின் உரையும் (10 தொகுதிகள்) நூல் வெளியீடு இடம்பெற்றிருந்தது. அன்றையதினமும் ஆசிரியர் கோ.மணி, மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி தலைவர் ஹரி தியாகராஜன், சக்தி குழும நிர்வாக இயக்குநர் ம.பாலசுப்பிரமணியம், கலவை சச்சிதானந்த சுவாமிகள், பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள், ரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சீர்வளர்சீர் மாசிலாமணி ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், சேக்கிழார் ஆராய்ச்சி மையத்தின் செயலர் சிவாலயம் ஜெ.மோகன், தலைவரும் ஓய்வு பெற்ற நீதிபதியுமான எஸ்.ஜெகதீசன், சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பாலய சுவாமிகள், சீர்வளர்சீர் திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமிகள், சீர்வளர்சீர் சிதம்பர ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், சீர்வளர்சீர் சிறி தயானந்த சந்திர சேகர சுவாமிகள், திருக்குறள் பீடம் குருபழனி அடிகள், அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ஔவை ந.அருள், சேக்கிழார் ஆராய்ச்சி மைய துணைச் செயலர் வழக்குரைஞர் அ.க.ராஜாராமன் என பலர் விழாவில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு வாசிப்போம் பரிசில்கள் பெறுவோம்

மாணவர்களின் சைவ சமய அறிவினை மேம்படுத்தவும், தமிழர் வழிபாட்டு விழுமியங்களை வெளிக்கொண்டு வரவும், ஒவ்வொரு நிறைமதிக்கும், கொக்குவில் தென்னாடு செந் தமிழ் ஆகம சிவமடத்தினால் வெளியிடப்படும் தென்னாடு திங்கள் இதழினை கருத்துடன் வாசிக்கும் பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இந்த பரிசில் திட்டம் ஆரம்பிக் கப்பட்டிருக்கிறது.

**பாடசாலை மாணவர்கள், பின்வரும் கேள்விகளுக்கு, ஆனித் திங்கள் 59 ஆவது தென்னாடு திங்கள் இதழில் இருந்து பதில்களை எழுதி, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்த லுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத் தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியா ளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடித உறை யின் மேல்மூலையில் 'தென்னாடு வாசிப்போம்' என்று குறிப் பிட்டு அனுப்பவும்.**

**கேள்விகள்:**

1. ஐந்திரம் எனும் பஞ்சாங்கம் என்பது என்ன?
2. நட்சத்திரம் என்பதின் பொருள் என்ன?
3. நட்சத்திர வானியல் அறிவியல் கணிப்பு என்ன?
4. ஓரை அல்லது இராசி மண்டலம் என்பதின் பொருள் என்ன?
5. நட்சத்திர பிறந்த நாள் கணிப்பின் சிறப்புகளை எவ்வாறு தமிழர் மரபு காண்கின்றது ?
6. சிவபெருமான் சுந்தரரின் கனவில் தோன்றிய தலத்தை குறிப்பிட்டு, சுந்தரர் பாடிய பதிகத்தின் முழுமையாக எழுதுக?
7. சண்டேசுவரருக்கு குறுக்காகச் சென்று வழிபடக் கூடாததன் காரணம் என்ன ?
8. புளியந்தீவு நாகோசுவரன் திருக்கோயில் வரலாற்றை அறிய உதவும் இலக்கியச் சான்றுகள் எவை?
9. 'அணிச்சல் வெட்டி மெழுகுதிரி அணைப்பது மருளையே சேர்க்கும்' என்ற ஆசிரியர் தலைப்பு கட்டுரையின் கருத்தை ஐந்து வரிகளில் சுருக்கமாக எழுதுக?
10. 'சைவம் எழுச்சி காணட்டும்' என்ற ஆசிரியர் தலைப்பு கட்டுரையின் கருத்தை ஐந்து வரிகளில் சுருக்கமாக எழுதுக?

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி:**
**ஆவணித் திங்கள் 15 ஆம் நாள் (31-08-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# கடந்த இதழின் 'தென்னாடு வாசிப்போம்' போட்டியில் பரிசில் பெறுபவர்கள் விபரம்

ஆனித் திங்கள் 59 வது இதழ் 'தென்னாடு வாசிப்போம்' போட்டி யில், 11 மாணவர்கள் பங்குபற்றியிருந் தனர். அவர்களின் விபரங்களை இங்கு பதிவிட்டுள்ளோம்.

**யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி**

1. செல்வி. அஸ்மியா ஜெயசுதன்
2. செல்வி.ஜோர்க்கரிசன் அபர்ணா
3. செல்வி. சுதேஸ்குமார் கிஷானா
4. செல்வி. நிரஞ்சன் யஸ்வினி
5. செல்வி. டில்ஸ்சன் ரேனுஜா

**தி/மூ/ஸ்ரீ/சண்பக மகா வித்தியாலயம்**

1. செல்வன். ரவிச்சந்திரன் யதுர்சன்
2. செல்வி. கோணலிங்கம் பதுஷா ணியா
3. செல்வி. ரஜித்குமார் குகநிதா
4. செல்வன். வீரசிங்கம் கஜன்
5. செல்வி. மாணிக்கராசா கிதுசா
6. செல்வி. யோகராசா நிசா

# சொற்சிலம்பம்-5

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ■ | 02 | |
| 03 | | | | ■ | 04 | | |
| | ■ | ■ | ■ | 05 | | | |
| | ■ | 06 | ■ | | | 07 | ■ |
| | ■ | | ■ | | | | 08 |
| | ■ | | 09 | | | | |
| | ■ | | | | ■ | | |
| ■ | 10 | ■ | | ■ | 11 | ■ | ■ |

### இடமிருந்து வலம்

*01. திருமுருகாற்றுப்படை பாடியவர்*
*02. செல்வம்*
*03. வாமதேவ முகம் நோக்கும் திசை*
*04. கொற்றவை தெய்வத்தின் வடிவம்*
*05. மீனராசியை குறிக்கும் மாதம்*
*10. மூங்கில்*

### மேலிருந்து கீழ்

*01. சிவனை வணங்கினால் இவை நன்மை செய்யும்*
*04. இன்பத்தை வழங்குவதால் சிவனின் நாமம்*
*05. யோகக்கலையை முறையாக வகுத்த சித்தர்*
*06. நல்லூர் கோயிலின் தலவிருட்சம்*
*07. சங்ககால வீரர்களை புதைத்த இடத்தில் நடுவது*
*08. முருகனின் திருப்பெயர்களில் ஒன்று*
*09. தாண்டவ மூர்த்தி*
*11. சோலை*

**பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப்படுத் தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர் களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடிதஉறையின் மேல்மூலையில் "சொற்சிலம்பம்" என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
**ஆவணித் திங்கள் 15 ஆம் நாள் (31-08-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-4

**(கடந்த திங்கள் சொற்சிலம்பத்திற்கான விடைகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 தி | ரு | ச் | 02 செ | ந் | தூ | ர் | ■ |
| 03 யா | னை | ■ | ங் | ■ | ■ | ■ | ■ |
| ன | ■ | 04 | கு | 05 தி | ■ | 06 ப | தி |
| ம் | ■ | ■ | ந் | ரு | ■ | 07 தி | தி |
| ■ | ■ | ■ | த | வி | ■ | 08 க | தி |
| 09 ர | தி | ■ | ர் | ழா | ■ | ம் | ■ |
| 10 பா | ச | ம் | ■ | ■ | ■ | 11 மா | டு |
| ■ | ■ | 12 சு | வா | மி | ம | லை | ■ |

### இடமிருந்து வலம்

*01. அண்மையில் தமிழிலும் திருக்குட நன்னீராட்டு நடை பெற்ற தமிழகத்தின் பிரபலமான முருகன் கோயில்*
*03. ஞானத்தின் குறியீடாக விளங்கும் விலங்கு*
*04. சமய தீக்கை என்பது சைவத்தின் நுழைவு ........ ஆகும்.*
*06. வரம்பில் ஆற்றலுடைய பொருள்*
*07. சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையேயான பஞ்சாங் கப் பதம்*
*08. வேகம்*
*09. காமனின் இணை*
*10. அறிவை மறைப்பது*
*11. செல்வம்*
*12. அறுபடை வீடுகளில் ஒன்று*

### மேலிருந்து கீழ்

*01. மனதை ஒருநிலைப்படுத்த உதவுவது*
*02. நல்லூர் கோயிலிற்கு கொடிச்சீலை கொடுக்கும் மரபினர்*
*05. ஆண்டுகளுக்கு ஒருமுறை கோயில்களில் நிகழ்வது*
*06. பத்துப் பாடல்கள் அடங்கிய தொகுதி*
*08. இரும்பை உருக்கி அடிக்கும் இடம்*

**பரிசில் பெறுபவர்கள்**

*தென்னாடு சொற்சிலம்பம் - 4 இல், 3 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். அவர்களில் ஒருவர் மட்டுமே அ னைத்து விடைகளையும் சரியாக பூர்த்தி செய்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.*

**செல்வன். ஈஸ்வரன் அன்பரசன்**
**யா / கொக்குவில் இந்துக் கல்லூரி**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2000 ஆண்டுகள் பழமையான நாகர் வழிபாட்டுடன் தொடர்புடைய அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு நாகர் மலைக்கோயில்கள்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கிராமம் கஞ்சிக்குடிச்சாறு ஆகும். கல்முனையிலிருந்து திருக்கோயிலுக்குச் செல்லும் பிரதான பாதையில். சிறிவல்லிபுரம் பாதையில் ஏறத்தாள 25 கி. மீ தூரப்பயணத்தில் கஞ்சிகுடிச்சாறு நாகர்மலையும் அங்கு நாகர் கோட்டங்களும் அமைந்துள்ளன. இவ்விடம் புராதன காலம் முதலாகத் தமிழர் வாழ்ந்த பழமைக் கிராமமாகத் திகழ்ந்துள்ளது. இக்கிராமம் அடர்ந்த வனப்பகுதியாகும். வனவிலங்குகளின் ஊடாட்டம் உள்ளதாகவும், சிறிய மலைத் தொடர்கள், நீண்ட குளம், சிறு ஆறுகள் என்பனவும் இவ்வூரில் காணப்படுகின்றன. இன்று சிறுதொகை மக்களே இங்கு வாழ்கின்றனர். அவர்கள் சேனைப்பயிர்ச் செய்கை, வேளாண்மை, நன்னீர் மீன்பிடி ஆகிய தொழில்களைப் புரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

### நாகர் மலைக்கோயில்கள்

இலங்கையின் பல்வேறு பாகங்களில் தற்போதைய ஆய்வுகளின்படி நாகர் இனத்தின் பண்பாட்டுச் சின்னங்கள் கிடைத்து வரும் நிலையில், இலங்கையின் பழமைக்குடிகளில் நாகர் இனமும் ஒன்று என்பதற்கு பலகதைகள் இலக்கியங்களில் குறிப்பிட்டிருந்தாலும், அவற்றை நியாயப்படுத்துவதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் இன்று நிலமை அவ்வாறில்லை, தமிழ் மக்களிடையேயும், ஆய்வு நிலையில் நிற்போரிடத்திலும் தொல்பொருளியல், வரலாறு பற்றிய விழிப்புனர்வு ஏற்படத் தொடங்கியதன் பலனாக 2015 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு கிழக்கிலங்கையில் தொல்லியல், வரலாற்றுத் துறையில் புத்தொளி வீசலாகிற்று. இதற்குப் பிதாமகனாக விளங்கியவர் பேராசிரியர் சி. பத்மநாதன் ஆவார். அவர் தேடல்களிலும், ஆய்வுகளிலும் கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் என்ற நூலும் உருவாகியது சிறப்பம்சமாகும்.

பேராசிரியர் அந்நூலில் இரண்டு பக்கங்களில் கஞ்சிக்குடிச்சாற்றில் மலையிற் குடைந்த நாகர் கோட்டங்கள் என்ற தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் நான்கு குகைகளில் காணப்பட்ட விபரங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 20-06-2025 அன்று நானும் எனது மாணவர் குழுவும், அம்பாறை மாவட்ட இந்துசமய திணைக்களத்தின் அதிகாரியும் இவ் நாகர் மலைக்கும் அதனை அண்டிய மலைத் தொடர்களுக்கும் சென்று பார்வையிட்ட பொழுது, பேரரிசிரியர் குறிப்பிடாத பல நாகரின் பாண்பாட்டுச் சின்னங்களை எம்மால் அவதானிக்க முடிந்தது. அவ் அவதானிப்பின் சுருக்கத்தையே இக்கட்டுரையாக்கமாகத் தந்துள்ளேன்.



**சைவப்புலவர்**
**சுந்தரமூர்த்தி துஷ்யந்த்**
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

கஞ்சிக் குடிச்சாற்றில் அமைந்துள்ள மலைகளில் உயரமானது நாகர் மலையாகும். இம்மலை ஆற்றுப்படுக்கையிலிருந்து சுமார் 120 அடி உயரமானது. இம்மலையின் உச்சிக்குச் செல்வதற்கு ஆற்றோரத்திலிருந்து கால் பதியக்கூடிய படிக்கட்டு சிறிது சிறிதாக வெட்டப்பட்டுள்ளது. மலையின் உச்சியில் இயற்கையாகக் கிடைக்கும் மழை நீரைச் சேமித்து வைக்கக்கூடிய சிறிய குளம் ஒன்று அமைந்துள்ளது. அக்குளத்தின் மேற்பாகத்தில் சிதைந்த நிலையில் சில எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளது. அவை கறுப்பு பாசி படிந்த நிலையில் உள்ளது. அதனால் அவற்றில் உள்ள குறிப்பை எம்மால் இனம் காணமுடியாது இருந்தது. அக்குளஅமைப்பு நிச்சயமாக நாகரின் வடிவமைப்பாக இருக்க வேண்டும்.

மலையின் முகட்டில் ஏறத்தாள 60 அடி நீளமான பகுதியில் ஒரே வரிசையில் குடபோகங்கள் அமைந்துள்ளன. இவை நாகரின் கோட்டக் குகைகள் என்று கூறப்படுகின்றது. நாகர்கள் தங்கள் வழிபாட்டு இருப்பிடங்களுக்கு மலையைக் குடைந்து இக் கோட்டங்களை அமைத்துள்ளதாகத் தெரிகின்றது. இக் கோட்டங்கள் யாவும் வில் போன்ற அமைப்புடையது, மேற்பாகங்களைத் தாங்கக் கூடிய தூண்கள் எதுவுமில்லை, குகைகளின் மேல் விளிம்புகள் வெட்டப்



பட்டுள்ளது. சில குகைகளில் மேல் விளிம்பு இரண்டு கட்டமாக வெட்டப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட பகுதிகளில் **'மணிணாகன் பள்ளி'** என்னும் பெயர் மங்கியநிலையில் தெரிகின்றது. ஆனால் மலையின் பிற்பகுதியில் **'மணிணாகன் பள்ளி'** என்பது தெளிவாக வெட்டப்பட்டுள்ளது. இங்கு மணிணாகன் பள்ளி என்பது நாகரின் வழிபாட்டுத் தலத்தைச் சுட்டி நிற்கின்றது. இது போன்ற பெயர்கள் கிழக்கிலங்கையில் வந்தாறுமூலை, வெல்லாவெளி, ஏறாவூர், கல்லடிச் சேனை, களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் கிடைத்த சில கல்வெட்டுக்களிலும் காண முடிகின்றன.

நாகர்மலையில் காணப்படும் நாகர் கோட்டங்கள் என்று கூறப்படும் குகைகளின் உள்ளே உள்ள பாறைச் சுவரில் தென்படும் பண்பாட்டுச் சின்னங்கள் மணிணாகன் பள்ளி என்பதை உறுதி செய்கின்றது.

## முதலாம் கோட்டம்

இக்குகைச் சுற்று ஆழமானது. ஏறத்தாள எட்டு முதல் பத்து அடி நீளமானது குகைக்குள் பல சிறு சிறு குகைகளும் குடையப்பட்டுள்ளன. குகையின் உட்புறச் சுவரில் முகலிங்கம் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வடிவத்தின் இடது புறத்தில் பாம்பின் வடிவங்கள் தெரிகின்றன. பல இடங்களில் மணிணாகன் என்ற பெயரும் தெளிவற்ற நிலையில் பதியப்பட்டுள்ளது. இதன் அருகாமையில் மனிதத் தலை பொருந்திய உருவம் கீழ்வடிவம் பாம்பின் உடலாகத் தெரிகின்றது. அது பாம்பு உடல் பொருந்திய மனித வடிவமாக உள்ளது. இது மணிணாகனின் கற்பனை உருவமாக இருக்கலாம் என்று பேராசிரியர் சி . பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார். நன்றி : (இலங்கைத் தமிழர் வரலாறு)

மேற்படி குகையின் உள்ளே உள்ள பண்பாட்டுச் சின்னங்களை நோக்குகையில், நாகர்கள் நாகபாம்பை வழிபடுபவர்கள், அவர்கள் நாகத்தின் அம்சமானவர்கள். ஒருதலை முதல் ஏழு தலைகள் முதலான நாக வடிவங்களை வழிபட்டவர்கள். இப்பாம்புகளோடு இலிங்கத்தையும் இணைத்துப் பூசித்தவர்கள். இதனால் மணிணாகன் பள்ளி என்று அவர்களின் வழிபாட்டிடங்களைக் கொள்வதுண்டு. இவையே காலத்திற் பிற்பட்ட சைவசமயச் செல்வாக்கு என்று கருதிக் கொள்ள முடிகின்றது.

## இரண்டாவது கோட்டம்

நாகர் மலையில் அமைந்துள்ள இன்னுமொரு குடபோகம் இதுவாகும். இதுவும் வில்வளைவானது. தூண்களற்ற வகையில் குடையப்பட்டுள்ளது. குகையின் பிற்பகுதியில் 'மணிணாகன் பள்ளி' என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. குகையின் அடிச்சுவரில் இரு முகங்கள் முட்டிநிற்கும் வகையில் பாம்பின் வடிவம் தெரிகின்றது. இக் குலையின் முன்னால் அரைவட்ட பளிங்குக் கல் ஒன்றும் காணப்படுகின்றது. அவற்றில் எவ்வித வடிவங்களும் தென்படவில்லை.

## மூன்றாம் கோட்டம்

இக் கோட்டம் சற்று நீளமானது. ஆனால் 6 அடி அகலம் கொண்டது. நீர் குகையினுள் செல்லாத வண்ணம் இரண்டு முறை குகை விளிம்புகள் வெட்டப்பட்டுள்ளது. குகையின் உட்புறச் சுவரின் மேற்பாகத்தில் கரு நிறமான விரிந்த பாம்பின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

நாகர் மலையில் இருந்து சற்று கீழிறங்கினால் நாகரின் வேறொரு கோட்டம் அமைந்துள்ளது இக்குகை மலையின் ஒரு பகுதியைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. இதுவும் வில்வளைவு பொருந்தியது. குகையின் உள்ஆழம் சுமார் 7 அடியானது. இங்கும் பாம்பின் தலை உருவம் தெரிகின்றது. அப்பாம்பு உடலை நீட்டிய கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. குகையின் இடது பக்கத்தில் 'மணிணாகன்' என்றும் பெயர் பெரிய எழுத்தில் தெரிகின்றது. இக்குகை நாகரின் கோட்டங்களில் வேறொரு வகையானது இக்கோட்டம் எவரும் செல்ல முடியாத வெளவால்களின் கூடாரமாகியுள்ளது.

மலையின் வேறொரு இடத்தில் நிலமட்டத்திற்கு மேல் மேற்குகை போன்ற அமைப்பும் இடம் பெற்றுள்ளது. அதுமிகவும் ஆழமற்றது. குகை வட்டவடிவமான முகப்புடையது. உள்ளமைப்பு சதுரமானது. இவ்வாறு சிறிய குகைள் பெரிய குகை மேல் குடையப்பட்டுள்ளது. அதில் ஒரு சிறிய குகையில் ஒரு பாம்பு வெளிவருவது போன்ற சிற்பம் அமைந்துள்ளது இச்சிறு குகைகள் மணிணாகன் பள்ளி என வழங்கப்படும் கோட்டங்களில் வேறொரு வகையா



னவை. இவற்றைப் போன்ற அமைப்பு இலங்கையில் எந்தப் பாகத்திலும் காணப்படாததொன்றாகும்.

இவை தவிர நாகர் மலையில் பெரிதும் சிறிதுமாகக் குடையபட்ட 20 மேற்பட் குகைகள் காணப்படுகின்றன. சில குகைகள் கற்களை வெட்டிப் பொருத்தப்பட்டதாகவும் உள்ளன. இத்தகைய குகைகளை உற்று நோக்கின் இலங்கையில் இது போன்ற மணிணாகன் பள்ளிகளை காணமுடியாத தொன்று. நாகர்களின் வழிபாடு சிறப்புப் பெற்ற கிழக்கிலங்கையில் கஞ்சிக்குடிச்சாற்றில் அமைந்துள்ள குடைபோகங்களும் அவற்றில் பொறிக்கப்பட்ட பண்பாட்டுச் சின்னங்களும் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவை. அவை நன்கு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய தமிழரின் பண்பாட்டு மரபு அம்சங்களாகும்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முறைசெய்வோம்"

**திருப்பாச்சிலாச்சிரமத்தில் வெகுண்டு முறையிட்டுப் பொன் பெறுதல்**

சுந்தரர் திருவானைக்காவை வணங்கிய பின்னர் திருப் பாச்சிலாச்சிரமம் எனும் தலத்தினைச் சென்றடைகின்றார். கோயிலை வலமாய் வணங்கி உட்சென்று பாச்சிலாச்சிரம இறைவரின் திருமுன்பு சென்று காதலுடன் பணிகின்றார், திருப்புகலூரில் முன்னர் வேண்டியது போலவே இவ்விடத் தும் பொன் வேண்டி விண்ணப்பிக்க, பிறைமதிப் பரம் பொருளோ பொருளேதும் அருளாதவராய்த் திருவிளை யாடல் புரிகின்றார்,

சென்று திருக்கோபுரம் இறைஞ்சித் தேவர் மலிந்த திருந்துமணி
முன்றில் வலங்கொண்டு உள்ளணைந்து முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சி
நன்று பெருகும் பொருட்காதல் நயப்புப் பெருக நாதரெதிர்
நின்று பரவி நினைந்தபொருள் அருளாதொழிய நேர்நின்று
- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 79)

மாறா அன்பும் பொருள் பெறாத ஆற்றாமையும் ஒருசேர உள்ளத்தில் எழத் தோழர் எனும் உரிமைப் பாட்டினால் உள்ளம் புழுங்கி, எலும்பும் கரைந் துருகுமாறு அங்குக் குழுமியிருந்த திருத்தொண் டர்களிடம் முறையிடும் பான்மையில் **'இவரலாது இல்லையோ பிரானார்'** என்று திருப்பதிகம் பாடுகின் றார்,




**அன்பு நீங்கா அச்சமுடனடுத்த திருத்தோழமைப் பணியால்**
**பொன்பெறாத திருவுள்ளம் புழுங்க அழுங்கிப் புறம்பொருபால்**
**முன்பு நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பாடுடையார் போல்**
**என்பு கரைந்து பிரானார் மற்றிலையோ என்ன எடுக்கின்றார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 80)**

'இப்பிறப்பு மட்டுமின்றி எழும் பிறவிகள் தோறும் வழித்தொண்டு புரிவேன்' என்று இறைவரிடம் முதலில் உறுதி கூறி விண்ணப்பித்துப் பின், இறையவர் ஒரு பித்தரே ஆகிலும் தன்னை ஒரு பொருளாகக் கொள்ளாராயினும் இப்பிறப்பில் அருளாது மறுமையில் மட்டுமே அருள்வாராகிலும் பரிந்து ஒரு வார்த்தை பேசாராகிலும் பொருளேதும் ஈயாராகிலும் யாவர்க்கும் அருள் செய்துத் தனக்கு மட்டும் அருளாது போவாராகிலும் யாவும் தருவதாகக் கூறி மெய்யர் போல் ஆட்கொண்டுப் பின் எதுவொன்றும் அருளாது பொய்ய ராய்ப் போவாராகிலும் அரவம் சூடும் பண்பினர் ஆகிலும் இடுகாட்டில் ஆடும் தன்மையர் ஆயினும் எண்ணிறந்த முறை குறை கூறி முறையிட்டாலும் பிழை பொறுக்காது போவாராயினும், இவரன்றி அடியவனைப் பேணும் தலைவர் பிறிதொருவர் உளரோ? இல்லையென்றே உரைப்பேன்' என்று போற்றிப் பரவுகின்றார்.

**வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும் நெஞ்சமும் வஞ்சம்ஒன்றின்றி**
**உய்த்தனன் தனக்கே திருவடிக்கடிமை உரைத்தக்கால் உவமனே ஒக்கும்**
**பைத்த பாம்பார்த்தோர் கோவணத்தோடு பாச்சிலாச்சிராமத்தெம் பரமர்**
**பித்தரே ஒத்தோர் நச்சிலராகில் இவரலாது இல்லையோ பிரானார்**
**- (சுந்தரர் தேவாரம்: திருப்பாச்சிலாச்சிரமம் - திருப்பாடல் 1)**

'ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல' எனும் இறுதித் திருப்பாடல் வரி மூலம் 'இத்திருப்பாடல்களை ஏசும் பொருட்டோ இகழும் பொருட்டோ பாடவில்லை' என்று தெளிவுறுத்து கின்றார். பாச்சிலாச்சிரமத்து இறைவர் சுந்தரனாரின் திருப் பாடல்களால் திருவுள்ளம் மிக மகிழ்ந்துப் பொற்குவை களை அளித்து அருள் புரியத் தம்பிரான் தோழரும் அகமிக மகிழ்ந்துத் திருவருள் திறத்தினை வியந்து போற்றிப் பணி கின்றார்.

## திருப்பைஞ்ஞீலியில் கங்காளத் திருக்கோல அருட்காட்சி

சுந்தரர், பாச்சிலாச்சிரமத்தில் இறைவரின் அருள் பெற்றுப் புறப்பட்டு காவிரிக்கு இருமருங்கிலுமுள்ள திருத்தலங்களை வணங்கிப் பரவியவாறே, திருச்சி மாவட்டத்திலுள்ள காவிரி யின் வடகரைத் தலமான திருப்பைஞ்ஞீலியைச் சென்றடை கின்றார் (நாவுக்கரசு சுவாமிகளுக்கு இத்தலத்துறை இறைவர் வேதியரின் வடிவில் பொதி சோறும் நீரும் அளித்து அருள் புரிந்துள்ளார்). வன்தொண்டர் திருக்கோயிலினுள் புகுந்து, திருச்சுற்றினை வலமாய்ச் சென்று வணங்கி நிற்க, திருக்கரு வறையில் திருப்பைஞ்ஞீலி ஞீலிவனேசுவரப் பரம்பொருள் கங்காளத் திருவடிவம் காட்டிப் பேரருள் புரிகின்றார்.

**அப்பதி நீங்கி அருளினால் போகி ஆவின்அஞ்சாடுவார் நீடும்**
**எப்பெயர்ப் பதியும் இருமருங்கிறைஞ்சி இறைவர் பைஞ்ஞீலியை எய்திப்**
**பைப்பணி அணிவார் கோபுரம் இறைஞ்சிப் பாங்கமர் புடைவலம் கொண்டு**
**துப்புறழ் வேணியார்கழல் தொழுவார் தோன்று கங்காளரைக் கண்டார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 83)**

சிவபெருமானின் 64 திருவடிவங்களுள் ஒன்றாகப் போற்றப் பெறுவது இக்கங்காளத் திருக்கோலம், இம் மூர்த்தி பிட்சாடன வடிவத்தினின்றும் வேறுபட்டு விளங்கும் தன்மையர். வாமன மூர்த்தியின் முதுகெலும்பினைத் திருக் கரமொன்றில் தண்டமாக ஏந்தி, இடது திருப்பாதம் நன்கு ஊன்றியிருக்க, வலது திருப்பாதம் சற்றே வளைந்து நடப்பது போன்றிருக்க, புலியாடையொடும், திருமேனியெங்கிலும் பாம்பினை அணிந்தவாறும், நான்கு திருக்கரங்களொடும், பிச்சை பெறும் திருக்கோலத்திலும், எண்ணிறந்த பூதகணங்களும் பெண்டிரும் சூழ்ந்திருந்துப் போற்றும் ஆச்சரியமான திருமேனி வடிவினர்.

தம்பிரான் தோழர் கங்காள மூர்த்தியைக் கண்ணருவி பெருகியோடத் தொழுதிறைஞ்சி, கங்காளருக்குப் பிச்சையிட வரும் மகளிர் அம்மூர்த்தியின் திருவடிவ காரணங்களை ஒவ்வொன்றாக வினவியவாறு போற்றும் தொனியில் **'காருலாவிய'** எனும் பனுவலொன்றினை அமைத்துப் போற்றுகின்றார்,

**காருலாவிய நஞ்சையுண்டிருள் கண்டர் வெண்தலையோடுகொண்டு**
**ஊரெலாம் திரிந்தென் செய் ர்பலி ஓரிடத்திலே கொள்ளும் நீர்**
**பாரெலாம் பணிந்தும்மையே பரவிப் பணியும் பைஞ்ஞீலியீர்**
**ஆரமாவது நாகமோ சொலும் ஆரணீய விடங்கரே**
**- (திருப்பைஞ்ஞீலி: சுந்தரர் தேவாரம்: திருப்பாடல் 1)**

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**சண்டேசுவரப்பெருமானுக்கு ஆடை நூலை எடுத்துப் போடும் வழக்கும் பெரும் ஒலியெழுப்பிக் கைதட்டும் வழக்கும் அன்பர் சிலரிடம் காணக்கூடியதாகவுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ளலாமா?**

சிவபெருமானுக்குச் சூட்டிய ஆடை அணிகலன்கள் யாவும் சிவபெருமானுக்குப் படைத்த திருவமுதும் பூசை முடிவில் சண்டேசுவரப்பெருமானுக்கு வழங்குதல் வேண்டும் என்பது சிவாகமவிதி. அவரே, அவற்றின் பலனை அடியாருக்குக் கூட்டும் உரிமை உடையவர். சிவபெருமானுக்குச் சூட்டிய ஆடையை சண்டேசுவரப்பெருமானுக்கு சமர்ப்பணஞ் செய்து வழிபடும் மரபைக் கண்டு, அடியார் சிலர் தமது ஆடையையும் அங்ஙனம் கொடுக்கவேண்டும் என்று பிறழ்ந்து, பாவனையாகத் தமது ஆடையிலிருந்து நூல் எடுத்து சமர்ப்பிக்கும் கேட்டைச் செய்பவராயினர். சண்டேசுவரப்பெருமான் சிவபெருமானுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆடையாதி நைவேத்தியங்களாகிய சிவநிர்மாலியங்களை ஏற்றுக்கொள்பவரேயொழிய, மானிடப்பதர்களின் உலகியற் பண்டங்களையன்று.

மேலும், சண்டேசுவரப் பூசையில் தாளத்திரயம் என்னும் கிரியைச்செயன்முறை முதன்மை பெறுகின்றது. இடவுள்ளங்கையில் வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் மூன்றையுஞ் சேர்த்து நீட்டி மற்ற இரு விரலையும் நீக்கிய கோவிடான முத்திரையால் **"ஓம் அஸ்திராய பட்"** என இடவுள்ளங்கையில் மூன்று தரந் தட்டுதல் தாளத்திரயம் எனப்படும். ஒருசில நூல்களில், வலக்கைப் பெருவிரல் ஒழிந்த விரல்களினால் பதாகை முத்திரை கொண்டு இட உள்ளங்கையிலே **"ஓம் அஸ்திராய பட்"** என்று மூன்று தரந் தட்டுவது தாளத்திரயம் என்று கூறப்பட்டுள்ளது. கோவிடான முத்திரையைக் கொண்டு செய்வதுவே பெரும்பான்மையோர் வழக்காகும். இத்தாளத்திரயம் விக்கினம் செய்கின்ற இராட்சதரை ஓட்டுவது என்பது நம்பிக்கை.

எனவே, சிவபூசையில் ஒன்றியிருக்கும் சண்டேசுவரப் பெருமானின் சிவபூசைக்கு உதவுமாறு, அவருடைய சிவபூசையைக் குழப்பக்கூடிய இராட்சதரை ஓட்டும் வகையில் தாளத்திரயம் செய்வது என்பதுவே இயைபுடைய கருத்தாகும். அவருடைய சிவபூசையைக் குழப்பி எமது விண்ணப்பத்தைச் செவிமடுக்கச் செய்தல் என்பது சுருதி யுத்தி அனுபவத்திற்குப் பொருத்தாது மட்டுமன்று, சிவ பாதகத்தைச் செய்ததுமாகவே முடிவுறும். **"சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டுத், தோத்திரம் செய்து, மூன்று முறை கைகொட்டிச், சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்து"** என்பது நாவலர்பெருமான் அருளுரை. இங்கு மூன்றுமுறை கைகொட்டி என்பது தாளத்திரயம் என்க. எனவே, பெரும் ஒலி எழுப்புமாறு கண்டவிதத்தில் கை தட்டுதல் கூடாது. தாளத்திரயமே செய்தல் வேண்டும். இது சண்டேசுவரப் பெருமானின் சிவபூசைக்கு உதவிய பலனை நமக்கு அருளும் என்பதும் முடிவாகும்.

**சண்டேசுவரர் உற்சவத்தில் சண்டேசுவரப்பெருமானை மிகவேகமாகக் கொண்டு செல்லுதலும் ஆரவாரத்துடன் ஓடியவாறு சண்டேசுவரப்பெருமானைக் கொண்டு செல்வதும் முறையா?**

அஜிதாகமத்தில் கொடியிறக்கத்திற்கு முதல் சண்டேசுவர வழிபாடு செய்யப்படவேண்டும் என்று விதித்து, விரிவாக விளக்கப்பட்டுள்ளது. உத்தர காமிக ஆகமத்தில் சிவோற்சவத்தில் சண்டேசுவரருக்கு உற்சவம் செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளதே யொழிய, கொடியிறக்கத்திற்கு முன்னரோ பின்னரோவென்று கூறவில்லை. இலங்கைச் சைவாலயங்களில் சண்டேசுவர உற்சவம் என்பது கொடியிறக்கத்தைத் தொடர்ந்து நடைபெறும் உற்சவமாகவே வழக்கத்தில் உள்ளது. சண்டேசுவரர் விக்கிரகம் சிறியதாக அமைந்திருப்பதனால், சிறுவர் அதனைத் தூக்கிக்கொண்டு ஓடிவருமாறு உற்சவம் நடக்கும் வழக்கு ஏற்பட்டுள்ளது.

சிறுவர் பலர் கூடிச் சண்டேசுவரப்பெருமானைத் தூக்கி வலம் வருவதென்பது தவறன்று. சிறுவர்களையும் சைவாலய வழிபாட்டில் இதனூடாக உள்வாங்கிய பலன் சமூகத்திற்கு விளையும். ஆனால், சண்டேசுவரப்பெருமானை மிகவும் பணிவுடன் வழிபடுவதே பலனைத் தரும். **"தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது"** என்று அருளிச்செய்த அருணந்தி சிவாசாரியப் பெருமானின் அருள்வழியில் நின்று, சண்டேசுவரப்பெருமானை வழிபடுவதே சைவருக்கு பொருத்தமானதாகும். ஏனெனில், சிவனடியார்களுக்கெல்லாம் தலைமைச் சிறப்பு உடையவர் சண்டேசுவரப்பெருமான். அவர் முன்னால் அடக்கத்தோடு நிற்பதே முறையாகும்.

**"சண்டேசுரரை விதிப்படி வஸ்திரம், ஆபரணம், மாலை முதலிய சிவநிர்மாலியங்களால் அலங்கரித்துப் பூசித்து சிவிகையிலாவது, கேடகத்திலாவது ஏற்றி குடை, சாமரை முதலிய அலங்காரங்களுடனும், கீத வாத்தியங்களுடனும் வீதிப் பிரதக்ஷிணமாக வந்து அவருடைய தானத்தில் தாபித்து சிவோற்சவபலனைத் தரும்படி பிரார்த்திக்க. இவ்வுற்சவத்தை மனவுறுதியுடன் செய்பவர்களே சிவோற்சப பலனை அடைவார்கள்"** என்பது அச்சுவேலிக் குமாரசுவாமிக் குருக்களவர்கள் மகோற்சவ விளக்கம் நூலில் விளக்கிய சண்டேசுவர உற்சவ முறைமையாகும். நிறைமாதக் கருப்பிணிப் பெண் நடப்பது போல் வலம் வருதலே பிரதக்ஷிணத்தின் முறையாகும்.

திருச்சிற்றம்பலம்



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org


**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




## ஐம்பதும் அறுபதும்!

மனித வரலாற்றில் மாற்றங்களை ஏற்படுத்திய இயக்கங்கள் ஒரு சிறு ஒளிக்கதிராய் பிறந்து, இறந்த காலத்தின் இருளைக் கிழித்து பேரொளியாய் உருக் கொண்டவையே! அந்த ஒளி எதிர்காலத்தின் மீது நம்பிக் கையை ஏற்படுத்தும்! வழமைச்சகதியில் இருந்து விலகிப் புதிய பாதையை அடையாளம் காட்டும்! அத்தகைய ஓர் ஒளிதீபம் தான் **“தென்னாடு”** செந்தமிழ் ஆகம சிவமடம்.

தென்னாடு சிவமடத்தின் இடையறாத வெளியீடாகச் சைவமும் தமிழும் தழைக்கத் தொடர்ந்து வெளிவரும் இலவச திங்கள் இதழாகிய இத்தென்னாடு இதழ் இம்முறை அறுபதாவது இதழாக உங்கள் கைகளில் இருக்கின்றது! இது கடந்த ஐந்து வருடப் பெரும் பயணத்தின் ஒரு மகத்தான படிக்கல்! சைவத்தை உயிராகப் போற்றும் வாசக மனங்களில் வசித்துவரும் தென்னாடு இந்த நிலம் கடந்து புலத்திலும் தன் சமயப்பணியை எழுத்துகளூடாக எடுத்துச்செல்கின்றது!

இங்ஙனம் ஒரு தெய்வத்தமிழ் சைவ இதழ் ஈழ நாட்டில் இடையறாது தொடர்ந்து இலவச வெளியீடாக வெளிவருகின்றது என்றால் இவ் இதழை பெரும் பொருட்செலவோடு வெளியிடுகின்ற தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்கள் தன் நேரத்தையும் முனைப்பையும் முயற்சியையும் அர்ப்பணித்திருக்கின்றார்கள் என்பதுதான் வெளிப்படை உண்மை! இந்த பத்திரிகை அறுபதாவது இதழாக வெளி வருகின்ற இந்த நேரத்தில் இதற்கெல்லாம் ஊன்றுகோலாக நின்று உழைக்கக்கூடிய தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நிறுவுனர் தென்னவன் பார்த்தீபன் அவர்கள் தன்னுடைய ஐம்பதாவது பொன்னகவை ஆண்டை காண்கின்றார்!

பண்பாட்டுத் தளங்களில் உறுதியாகவும் வலிமையாகவும் நின்று செயல்படுவதே கடினமாகியுள்ள இன்றைய சூழலில், செந்தமிழ் வழிபாட்டையும், தெய்வத்தமிழ் இதழையும் இளைய தலைமுறைக்கு கொடுத்துவிட வேண்டும் என முயலும் தென்னவனுடைய செயற்பாடுகள் அடுத்த தலைமுறைக்கு புதிய பாதையைக் காட்டுகின்றன! பத்திரிகையைப் பற்றியும், அதன் உள்ளடக்கங்களைப் பற்றியும் இளம் வாசகர்கள் ஆர்வத்துடன் பேசுவதைப் பார்க்கும்போது, அவருடைய முயற்சி வெற்றிப் பாதையில் இருக்கின்றது என்பது உறுதி!

இது அவருக்கு ஐம்பதாவது பொன்னகவை ஆண்டு! இனியும் ஆண்டுகள் மாறும் வயதுகள் கூடும், இக்கால ஓட்ட உலகில் எல்லாமே கடந்து செல்லத்தக்கது. ஆனால், ஒருவர் தன் பயணப் பாதையில் தன்னால் முடிந்ததைச் செய்து விட்டு, பின்பு திரும்பிப் பார்க்கின்ற போது அவர் உள்ளத்தில் எழும் நிறைவே காலம் அவரின் பிறப்பின் பொருட்டு அவருக்கு கொடுக்கும் பெரிய வாழ்த்து! அரிய பரிசு!

இவ்வாழ்த்தையும் பரிசையும் தென்னவன் அவர்கள் இந்த ஐம்பதும் அறுபதும் சந்திக்கும் சந்தியில் பெறுகின்றார் என்றால் அது மிகையல்ல!

ஐம்பது வயது என்பது அனுபவத்தின் விளிம்பு. அறுபதாவது திங்கள் இதழ் என்பது ஒரு சாதனையின் அடைவு! இவ்விரு நிகழ்வுகளும் எதிர்காலத்திற்கான நல்ல அடைவுகளை வளர்ச்சி நோக்கி எமக்குத் தர ஐம்பூதநாதரின் அருளை வேண்டிப் பணிவோம்!

**வாழ்க பல்லாண்டு! இன்னும் வளரட்டும் தென்னாடு!**

**திருச்சிற்றம்பலம்**

# கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்ப நாயனார்





செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

நிலையற்ற உடலில் உள்ள உறுப்புகளை தானம் செய்யலாம் என்ற சிந்தையை மக்கள் மயப்படுத்த முதன் முதலில் கண் தானம் செய்து அருளியவர் கண்ணப்ப நாயனார் ஆவார். இவர் **“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி”** என மாணிக்கவாசகராலும், **“தொண்டு செய்த நாளாறில் கண் இடந்து அப்ப வல்லேன் அல்லேன் ”** என பட்டினத்தாராலும், **“கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்”** என்று சுந்தரராலும் எனப் போற்றப்பட்டவர்.

இவ்வாறு பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு, பொத்தப்பி நாட்டிலே மலைகள் சூழ்ந்த உடுப்பூரில், பல நாட்களாக இறைவனிடம் குழந்தை வரம் வேண்டி வழிபட்ட வேடுவத் தலைவன் நாகனுக்கும், தத்தைக்கும் மகனாக தேன்றியவரே திண்ணனார். இவர் திண்மையாகவும், வலிமையாகவும் இருந்ததால் திண்ணனார் என திருப்பெயர் சூட்டினார்கள். இவரை,

**மேவலர் புரங்கள் செற்ற**
**விடையவர் வேத வாய்மைக்**
**காவலர் திருக் காளத்திக் கண்ணப்பர்**
**திரு நாடு என்பர்**
**நாவலர் புகழ்ந்து போற்றும் நல்**
**வளம் பெருகி நின்ற**
**பூவலர் வாவி சோலை**
**சூழ்ந்த பொத்தப்பி நாடு - (திருத்தொண்டர்புராணம்:12:16:1)**

என சேக்கிழார் பெருமானும் போற்றிப் பாடியுள்ளார்.

திண்ணனார் அவர்கள் வளர்ந்து தக்க பருவம் அடைந்ததும் வேடுவ குல வழக்கப்படி வில்வித்தை கற்று, ஒருநாள் கன்னி வேட்டை ஆட நாணன், காடன் என்ற இரு நண்பர்களுடன்

செல்கின்றார். நீண்ட தூரம் சென்றும் வேட்டைக்கு மிருகங்கள் எதுவும் கிடைக்கவில்லை. பின் ஒரு பன்றி அவர்கள் கண்ணில் தென்பட, நீண்ட தூரம் பன்றியை துரத்திச் செல்கின்றார்கள். பன்றியை துரத்தி வந்த பலர் களைப்புற்று நிற்க நாணன், காடன் எனும் இருவர் மட்டுமே இறுதிவரை திண்ண னாருடன் பன்றியைத் துரத்திச் செல்கின்றார்கள். இச்செய லானது ஒரு ஆன்மா பரமான்மாவை நோக்கிச் செல்லு கின்ற போது, ஒரு எல்லையின் பின் ஆன்மாவுடன் நல் வினை, தீவினை எனும் இரு வினைகள் மட்டுமே செல்லும் என்பதை விளக்குகின்றது.

வேட்டை ஆடிக் களைப்புற்ற திண்ணனார் பொன்முகலி ஆற்றில் நீர் அருந்தச் சென்ற போது, நல்வினை இறைவன் இருக்கும் இடத்தை சுட்டிக் காட்டுவது போல் அவர் நண்பன் நாணன் இத்திருக்காளத்தி மலையில் குடும்பித்தேவர் என்று ஒர் இறைவன் உள்ளார் என்று கூற, உச்ச இன்பத்தில் மலை யில் ஏறிச் செல்கிறார் திண்ணனார். இறையருள் கூடிய ஞான உணர்வால், மலையுச்சியில் ஒசை கேட்பது போல உணர்ந்த திண்ணனார் மலையின் இறைவன் தனியாக இருக்கின் றாரே என்று இறைவனையும் காண விரைந்து செல்கின்றார். இதனை சேக்கிழார் அருமையாக பின்வருமாறு போற்றிப் பரவுகிறார்.

**போதுவர் மீண்டு செல்வர்**
**புல்லுவர் மீளப் போவர்**
**காதலின் நோக்கி நிற்பர் கன்று**
**அகல் புனிற்று ஆப் போல்வர்**
**நாதனே அமுது செய்ய நல்ல**
**மெல் இறைச்சி நானே**
**கோதறத் தெரிந்து வேறு கொண்டு**
**இங்கு வருவேன் என்பார்**
**- (திருத்தொண்டர்புராணம்:12:16:112)**

காளத்திமலையில் குடுமித்தேவரை தனிமையில் கண்ட திண்ணனார், இறைவன் மீது கொண்ட பேரன்பினால் எம்பெருமானுக்கு வாய்ப்புனலால் திருமஞ்சனம் ஆட்டித், தம் தலையில் செருகிக் கொண்டு வந்த மலர்களையிட்டுப் பதப்படுத்தித், தேக்கிலையில் கொண்டு வந்த இறைச்சியை இறைவனுக்கு படைத்துவிட்டுச் செல்கிறார். அடுத்த நாள் அர்ச்சகராகிய சிவகோச்சாரியார் எம்பெருமானின் அலங் கோலக் காட்சியைக் கண்டு அருவெறுப்புற்று கவலை அடை கின்றார். திண்ணனாரின் அன்பின் பெருக்கைச் சிவகோச் சாரியாருக்கு உணர்த்த திருவுளங் கொண்ட சிவபெருமான் அவர்தம் கனவில் தோன்றி எடுத்துரைக்கிறார். அதனை,

**அவனுடைய வடிவு எல்லாம் நம்பக்கல் அன்பு என்றும்**
**அவனுடைய அறிவுஎல்லாம் நமை அறியும் அறிவு என்றும்**
**அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனியனவாம் என்றும்**
**அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என்று அருள் செய்தார்**
**- (திருத்தொண்டர்புராணம்:12:16:157)**

என்று சேக்கிழார் எடுத்து இயம்புகின்றார்.

நாள்தோறும் இவ்வாறு தொடர்ந்து வழிபாடு ஆற்றிவந்த திண்ணனார், வழமைபோல் கையில் பூவையும், வாயில் நீரையும், கையில் சுட்ட பன்றியிறைச்சியையும் எடுத்துக் கொண்டு மெய்யன்போடு வழிபட செல்கிறார். அன்றைய நாளில் திண்ணனாரின் அன்பை இவ்வுலகிற்கு எடுத்துக் காட்ட திருவுளங்கொண்ட எம்பெருமான், தன்னுடைய இடக்கண்ணில் இருந்து இரத்தத்தை பெருக்கெடுக்கச் செய் தார். அதைக்கண்ட திண்ணனார் செய்வதறியாது அருகி லிருந்த பச்சிலைகளைப் பறித்து அடைத்தார், இரத்தம் தடைப்படவில்லை.

அவ்வேளை 'ஊனுக்கு ஊன்' என்ற பழமொழி நினைவிற்கு வர தன் கண்ணைத் தோண்டி இறைவனுக்கு அப்ப இரத்தம் வடிவது நின்றது. பின் வலக்கண்ணிலிருந்து இரத்தம் வடியத் தொடங்கியது. உடனே திண்ணனாரும் தன் காலை தூக்கி, அடையாளமாக இலிங்கத்தின் வலக்கண்ணில் வைத்துக் கொண்டு தன் அடுத்த கண்ணையும் தோண்ட முற்பட்ட போது **"நில்லு! கண்ணப்பா நில்லு! என் அன்புடைத் தோன்றல் நில்லு! கண்ணப்பா நில்லு!"** என்று அசரீரி கேட்டது அக்கணம் இறைவன் அவ்விடத்தில் தோன்றி திண்ணனாரை தடுத் தாட்கொண்டு **"மாறிலாய் என் வலத்தில் நிற்க"** எனக் கூறி எப்போதும் தனது காவலனாக வலப்பக்கத்தில் இருக்க அருள் புரிந்தார். அன்று முதல் கண்ணப்பர் என்னும் திருப்பெயர் பெற்றார் திண்ணனார்.

**கானவர் பெருமானார் தங்கண்**
**இடந்து அப்பும் போதும்**
**ஊனமுது உகந்த ஐயர் உற்று**
**முன் பிடிக்கும் போதும்**
**ஞான மாமுனிவர் கண்டார்**
**நான்முகன் முதலாய் உள்ள**
**வானவர் வளர் பூ மாரி**
**பொழிந்தனர் மறைகள் ஆர்ப்ப.**
**- (திருத்தொண்டர்புராணம்:12:16:184)**

இவ்வாறு எம்பெருமான் மீது கொண்ட அளப்பெரும் கருணை காரணமாக தைத் திங்கள் மிருகசீரிட நாள்மீனில் சிவப்பேறு பெற்றார் கண்ணப்பர் பெருமான்.


அழிவடைகின்ற இவ்வுடலை இன்னொரு உயிருக்கு தானமாக அளித்தால் காலம் கடந்தும் நாம் வாழ்வோம் என்ற அற்புதமான ஒரு எண்ண அலையை இவ்வுலகில் உருவாக்கியவராக திகழும் கண்ணப்பநாயனாரைப் போ-ற்றிப் பணிவோம்.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு பரிமளசுகந்தநாயகி உடனுறை கல்யாணசுந்தரேசுவரர்- திருவேள்விக்குடி (துருத்தி)

## தேவாரப் பாடல்பெற்ற 276 சிவபுரங்களில் 77 ஆவது திருக்கோயில் திருவேள்விக்குடி (துருத்தி)



**"கயலன வரிநெடுங் கண்ணியொ டொருபக லமர்ந்தபிரான் வியனகர்த் துருத்தியா ரிரவிடத் துறைவர்வேள் விக்குடியே"**

சிவபெருமானின் திருக்கல்யாண வேள்வி இந்த இடத்தில் நடந்தால் திருவேள்விக்குடி என்ற திருப்பெயர் பெற்ற அற்புதத் தலமே அருள்மிகு பரிமளசுகந்தநாயகி உடனுறை கல்யாணசுந்தரேசுவரர் பெருமான் உறையும் திருவேள்விக்குடி (துருத்தி) திருத்தலம்.

**அமைவிடம்: மயிலாடுதுறை, தமிழ்நாடு.**

மயிலாடுதுறை - கும்பகோணம் இருப்புப் பாதையில் குற்றாலம் தொடர்வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே சுமார் 5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மயிலாடுதுறையிலிருந்து மகாராஜபுரம் செல்லும் பேருந்துகளில் செல்லலாம்.

**இறைவர் திருப்பெயர்: கௌதகேசுவரர், கல்யாணசுந்தரேசுவரர், மணவாளேசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்: பரிமளசுகந்தநாயகி, கௌதகேசி, நறுஞ்சாந்து நாயகி.**
**கோயில் மரம்: குத்தாலம்**
**தீர்த்தம்: பதும தீர்த்தம், சுந்தர தீர்த்தம், கௌதகாபந்தன தீர்த்தம்.**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேக்கிழார் முதலியோர்**
**பாமாலை: சம்பந்தர், சுந்தரர், சேக்கிழார்.**

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**ஓங்கிமே லுழிதரு மொலிபுனற் கங்கையை யொருசடைமேல்**
**தாங்கினா ரிடுபலி தலைகல னாக்கொண்ட தம்மடிகள்**
**பாங்கினா லுமையொடு பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ்**
**வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத் துறைவர்வேள் விக்குடியே.**
**(03-90)**

### சுந்தரர் அருளிய திருப்பதிகம்

**மூப்பதும் இல்லை பிறப்பதும்**
**இல்லை இறப்பதில்லை**
**சேர்ப்பது காட்டகத் தூரினு**
**மாகச்சிந் திக்கினல்லால்**
**காப்பது வேள்விக் குடிதண்**
**துருத்திஎங் கோன்அரைமேல்**
**ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல்**
**நாம்இவர்க் காட்படோமே. (07-18)**

### திருத்தலச் சிறப்பு

திருவேள்விக்குடி எனும் இத்தலம், நீண்ட நாள் திருமணமாகாதவர்களுக்கு அருள்புரியும் திருத்தலமாக திகழ்கிறது. இங்கு மணவாளேசுவரர், திருமணக் கோலத்தில் எழுந்தருளியிருப்பதாலும், கல்யாணசுந்தரராக வழிபடப்படுவதாலும், திருக்கல்யாணம் இங்கு நிகழ்ந்ததெனும் தொன் நம்பிக்கைக்கு ஆதாரமாக விளங்குகிறது.

இறைவன் இத்தலத்தில் மணவாளநம்பி, மங்கலநக்கர், திருவேள்விக்குடி உடையார் எனப் பல பெயர்களில் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார். உமையம்மையுடன் சிவபெருமானின் திருமணத்திற்கு முன்னோடியாக நடத்தப்பட வேண்டிய வேள்வி, கங்கணதாரணம்,



வேள்விச் சடங்குகள் ஆகியன இத்தலத்தில் நடைபெற்றதாலே இத்தலத்திற்கு **"திருவேள்விக்குடி"** என்ற பெயர் ஏற்பட்டது. மேலும், இங்கே கங்கணதாரணம் நிகழ்ந்ததற்கேற்ப கௌதுகாபந்தன க்ஷேத்திரம் என்ற சமஸ்கிருதப் பெயரும் வழங்குகிறது.



இது, தேவாரப் பாடல் பெற்ற 276 சிவத்தலங்களில் 77-வது, மேலும் காவேரி வடகரைத் தேவாரத் தலங்களில் 23-வது தலமாகும். சுந்தரர், சம்பந்தர் ஆகியோரால் பாடப்பெற்ற இத்தலம், திருத்துருத்தியுடன் கூடி பாடப் பட்டுள்ளது.

மயிலாடுதுறையிலிருந்து மகாராசபுரம் செல்லும் சாலையில், குத்தாலத்திற்குப் பக்கத்தில், திருவேள்விக்குடி அமைந்திருக்கிறது. சுற்றியுள்ள திருத்தலங்களான திருத்துருத்தி, திருமணஞ்சேரி, திருவாவடுதுறை, குறுமுளைப்பாலிகை ஆகியவற்றுடன் தொன்மமான புராணத் தொடர்புகளும், சைவத் திருக்கல்யாண சம்பிரதாயங்களும் இத்தலத்துடன் பின்னிப் பிணைந்துள்ளன. சைவத்தின் திருமணத் தத்துவத்தை ஒளிவிடும் இத்தலம், இன்றும் பத்தர்களால் சென்று வழிபடப்படுகின்றது. **“திருமணம் நடைபெற வழிவகுக்கும் திருத்தலம்”** எனும் பெருமையுடன் திருவேள்விக்குடி திகழ்கிறது.

## திருத்தல வரலாறு

திருவேள்விக்குடி என்பது சிவபெருமானும் உமையம்மையாரும் திருமணம் செய்து கொண்ட புனிதத் தலமாகும். இந்த தலத்தில் உமையம்மையார் 16 திங்கள்கிழமை விரதமிருந்து, மணலில் சிவலிங்கம் உருவாக்கி, அன்புடன் வழிபட்டார். 17வது திங்களில் சிவபெருமான் **“மணவாளேசுவரர்”** எனத் தோன்றி, அவரை மணம் செய்வதாக வாக்களித்து, திருமணம் செய்துகொண்டார்.

இந்த திருமணத்திற்கான சடங்குகளை நான்முகன் பெருமான் முன்னிலை வகித்து நடத்தியதால், இத்தலத்திற்கு **“திருவேள்விக்குடி”** என்ற பெயர் ஏற்பட்டது. இங்கு அம்மையாரின் அழகு வார்த்திகளால் விவரிக்க முடியாதது. துயரத்தில் இருந்த அன்னை, சிவபெருமான் தன்னை மணப்பதாக அறிந்தவுடன் ஆனந்த புன்னகையுடன் அருள் பாலிக்கிறார்.

இத்தலத்தில் வழிபடும் நற்காரியமாக, திருமணம் ஆகாதவர்கள் திருமண பாக்கியம் பெறுவார்கள் என்பது நம்பிக்கை. ஒரு அரசகுமாரனும் இவ்வாறே இறைவனை வேண்டி, இறைவனால் பூதம் மூலம் பெண்ணை வரவழைத்து திருமணமேற் கொண்ட வரலாறும் சொல்லப்படுகிறது.

மேலும், இத்தலம் மாதொருபாகானர் (அர்த்தநாரீசுவரர்) உருவாக்கம் நிகழ்ந்த தலமாகவும், சுந்தரர் இங்குள்ள தீர்த்தத்தில் நீராடியதாகவும், திருத்துருத்தியோடு இணைந்துத் தேவாரப் பாடல்களில் இடம்பெற்ற தலமாகவும் அறியப்படுகிறது.

## திருக்கோயில் அமைப்பு

திருவேள்விக்குடி திருக்கோயிலில் மூன்று நிலை கொண்ட கிழக்கு நோக்கிய இராசகோபுரம் அமைந்துள்ளது. இதில் இரண்டு வீதிகள் உள்ளன. நுழைவாயிலின் வலப்புறத்தில் தலதீர்த்தமான திருக்குளம் அமைந்துள்ளது.

முன்புறமாக கருப்பதொட்டி, கொடிமரம், பலிபீடம் மற்றும் நந்தி ஆகியவற்றைக் கடந்து நடைமண்டபம் (அர்த்தமண்டபம்) மற்றும் பெருமண்டபம் (மகாமண்டபம்) வழியாக மூலவர் சன்னதிக்குச் செல்லலாம். மூலவராக கல்யாணசுந்தரேசுவரர் அருள்பாலிக்கிறார். அவரின் கருவறைச் சுற்று திருமுன்களாக தென்முகக்கடவுள் (தட்சிணாமூர்த்தி), பெருஞ்சோதியன் (இலிங்கோத்பவர்), மதிசெஞ்சடையோன் (சந்திரசேகரர்), மாதொருபாகனார் (அர்த்தநாரீஸ்வரர்) ஆகியோர் உள்ளனர். மாதொருபாகனார் சிலையிலே இறைவன் இடப்பக்கமாகவும், அம்பாள் வலப்பக்கமாகவும் தோன்றுவதை காணலாம். கருவறையை அடுத்த மண்டபத்தில் அகத்தியர், விநாயகர் மற்றும் நடராசர் திருமேனிகள் உள்ளன.

முதல் வீதியில் அமைந்துள்ள அம்பாள் பரிமளசுகந்த நாயகியின் சன்னதி தெற்குப் புறமாக உள்ளது. இதனைத் தொடர்ந்து ஈசானமூர்த்தி, பைரவர், சண்டிகேசுவரர், அகத்தியர், திருமால், கொற்றவை (துர்க்கை), வலம்சுழி விநாயகர், வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகன், இராமர், சீதை, இலட்சுமணர், அனுமார், வேழத்திரு (கஜலட்சுமி) ஆகியோருக்கான சன்னதிகள் அமைந்துள்ளன.



திருச்சுற்றில் ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர், நாவுக்கரசர், விநாயகர் ஆகியோர் அருள்பாலிக்கின்றனர். கோயில் வளாகத்தின் சில பகுதிகள் செங்குந்தக் கைக்கோளர் குடியினரால் கி.பி. 1085ஆம் ஆண்டு கட்டப்பட்டது என கல்வெட்டுகள் கூறுகின்றன.

இக்கோயிலின் கருவறை, நடைமண்டபம், பெருமண்டபம், கருவறைச் சுற்று ஆகியவை சிறந்த தற்கால கட்டடக் கலைக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. சிவபெருமானின் திருமண புண்ணிய பூமியாகவும், பல தொன்ம வரலாற்றுச் சான்றுகளைக் கொண்ட தலமாகவும் திருவேள்விக்குடி திகழ்கின்றது.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

**(சென்ற இதழ்த் தொடர்ச்சி)**

**திருநகரச்சிறப்பு :-**

இப்புராணத்தில் திருமலைச் சிறப்பிலே கயிலாய மலையையும், திருநாட்டுச் சிறப்பிலே சோழநாட்டையும் கூறி வந்த ஆசிரியர் பெருமான் நகரச்சிறப்பிலே திருவாரூர் நகரத்தையே எடுத்துக் கொள்கிறார், காரணம் இப்புராணத் திற்கு முதல் நூலுமாகிய திருத்தொண்டத் தொகை எழுந்த இடமும் அதற்குப்பொருளாகிய அடியார் கூட்டம் (தேவாசி ரியன் திருக்காவனம் ) எழுந்தருளிய இடமும் ஆகிய திரு வாரூரே இதற்கு உரிய நகரமாம் என்பதும், இப்பகுதிக்கு மனுநீதிச்சோழர் புராணம், மனுநீதி கண்டபுராணம், தேரூர்ந்த புராணம், திருவாரூர்ச்சிறப்பு என்ற திருப்பெயர்களும் பல பிரதிகளில் காணப் பெறுகின்றன.

**பாடல் - 01**

**சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது**
**மன்னு மாமல ராள்வழி பட்டது**
**வன்னி ஆறு மதிபொதி செஞ்சடைச்**
**சென்னி யார்திரு ஆரூர்த் திருநகர்.**



**பவானி சிவ அ.வேலுச்சாமி**

**பொருள்: -** மேலே சொன்ன சோழநாட் டிலே உள்ள பல நகரங்களிலேயும் மிகப் பழமை வாய்ந்தது. நிலை பெறும் இலக்குமி தேவியினால் வழிபடப் பெற்றது. வன்னியும் கங்கையும் நிலாவும் தங்கிய சிவந்த சடைமுடித் தலைவராகிய தியாகேசர் எழுந்தருளிய திருவாரூர்த் திருநகரமாகும்.

**வி-உரை:- சொன்னநாடு:-** மேலே **'காவிரி நாட்டியல்பு அதனை யான் நவிலலுற்றனன்"** என்று தொடங்கி **"நாம் புகழ் திருநாடு"** என்று முடித்தது வரைப் பலதிறத்திலும் நாட்டுச் சிறப்பிலே புகழ்ந்துசொன்னநாடு என்றபடி.

**தொன்மையின் மிக்கது: -** இந்திருநகரத்தை ஆளும் தியாக ராசப் பெருமான் பல காலம் திருப்பாற் கடலில் விட்டுணு மூர்த்தியின் மார்பிலேயும் அதன் பின்னர்ப் பல காலம் தேவ உலகத்திலேயும் அதன்பின் மீளவும் திருவாரூரிலேயும், எழுந்த ருளினார் என்பது சரித வரலாறு.

**'அமரர் நாடாளாதே ஆரூரர் ஆண்ட அயிராவணமே"** என்றும், **"நீங்கியநீர்த் தாமரையான் நெடுமாலோடு நில்லா எம் பெருமானே என்றங்கு ஏத்தி வாங்கி மதி வைப்பதற்கு முன்னோ பின்னோ வளராரூர்க் கோயிலாக் கொண்ட நாளே"** என்றும் வரும் திருத்தாண்டகங்களாலும் காணலாம்.

**மன்னுமாமலராள் வழிபட்டது:-** இலக்குமி வழிபட்டுத் தவம் செய்தனள். அதனால் தனது மாங்கல்யம் நிலைபெறும் பேற்றை அடைந்தனள். இவர் வழிபட்ட திருக்குளம் கமலா லயம். இதனால் இந்நகர் திரு - ஆர் - ஊர் ஸ்ரீ திருவாரூர் என்ற பெயர் பெற்றதாகும்,

**வன்னி -** சிவபெருமான் பூசனைக்குரிய பத்திரங்களில் ஒன்று, ஆறு - கங்கை, மதி - மூன்றாம்பிறைச் சந்திரன்.

**மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை**
**மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை**
**ஆடுவான் புகுவதற்கு முன்னோ? பின்னோ?**
**அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே"**



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

என்று இந் நகரத்தின் தொன்மையை அப்பர் சாமிகள் திருத்தாண்டகத்திலே அருளியுள்ளார்கள்.

**பாடல் - 02**

**வேத ஓசையும் வீணையின் ஓசையும்**
**சோதி வானவர் தோத்திர ஓசையும்**
**மாதர் ஆடல் மணிமுடிவு ஓசையும்**
**கீத ஓசையு மாய்க்கிளர்வு உற்றவே.**

**பொருள்:-** வேதம் பயிலும் ஓசை - வீணைகளை இசைக்கும் ஓசை - சோதி மிகுந்த தேவர்கள் துதிக்கும் ஓசை ஆகிய இவைகள் கீதங்களின் ஓசையுடன் ஒன்றாகி எங்கும் கிளர்ந்து விரவிச் சந்தித்தன. இந்தப் பற்பல சத்த விசேடங்களும் அந் நகரிலே பொருந்திப் பெரும் கிளர்ச்சியைத் தந்தன.

**வி-உரை: - ஓசை -** பொருளற்ற சத்தம். ஒலி -பொருளுடையது இங்கு வேதம் தோத்திரம் - கீதம் இவற்றின் சத்தங்கள் பொருளுடையன ஆயினும் பலர் கூடி ஒலித்தலாலும், வினை - முழவு முதலியவற்றின் சத்தங்களுடன் விரவுவதாலும் பொருளறிய வாராது முழங்குதலால் ஓசை எனப்பட்டன.

**சோதிவானவர்:-** ஒளி உருவமுடையாராதலின் சோதி என்றார்.

**வேத ஓசை -** வீணையின் ஓசை: - "வேதத்து ஒலிகொண்டு வீணை கேட்பார்" (திருவெண்காடு- திருத்தாண்டகம்) என்ற திருவாக்கின்படி வேதமும் வீணையும் வைக்கப்பெற்றன.

இவ்வோசைகள் அடியார்கள், இறைவர் திருமுன்பு முழக்கும் வேத கானமும் வீணை ஓசையும் என்க, இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்' என்பது திருவாசகம்.

**மாதர் ஆடல் மணி முடி ஓசை: -** மாதர்கள் ஆட அதற்குத் தக்கபடி முழவு முழக்க உண்டாகும் ஓசை. "வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர" என்பது திருவையாறு தேவாரம்

**கீதம்:-** இசையுடன் கூடிய தமிழ்ப் பாட்டு. இது பெருமானது புகழ்களை இசையுடன் கூடி வாயாரப் பாடுவது. **"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள்"** (புள்ளிருக்கு வேளூர் பிள்ளையார் திருப்பதிகம்) **"அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்"**, "செந்தமிழ்க் கீதமும்" (திருமழபாடி) என்ற திரு ஞானசம்பந்தப் பிள்ளையார் தேவாரங்களிலும், **"அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே"** என்ற அப்பர் சாமிகள் தேவாரத்திலும் காணலாம். தமிழ்த் திருமுறைகளைப் பாடி இறைவனை வழிபட்டால் பெருமான் வேண்டுவது அனைத்தையும் அருளுவார் என்று அப்பர் சாமிகள் அருளுகின்றார்.

**"மனைகள்தொறும் இறைவனது தன்மைபாடிக் கருந் தடங்கண்ணினார் கழல் பந்து அம்மானைப் பாட்டயரும்"** என்பதும் தேவாரம்

**கிளர்வுற்றது:-** நகரம் கிளச்சியை அடைந்தது, வேத வீணை ஓசைகள் இறைவனது சிருட்டித் தொழிலையும், தோத்திர ஓசை தேவர்கள் செயலையும், ஆடன் முழவு- கீதம் -மனிதர் செயலையும் குறிப்பன. வானவர் அவ்வேள்விகளிலே வரும் தேவர்கள். தேவ உலகில் இருந்த தியாகேசர் இங்கு இருத்தலால் அவரை வழிபடவும் அடியார்களை ஆசிரயித்து நலம் பெறவும், தேவர்கள் இங்கு வந்து கூடுவதும் இயல்பாம். இப்பாட்டில் கூறியவை நகர்ப்புற நிகழ்ச்சிகள்.

**பாடல் - 03**

**பல்லியங்கள் பரந்த ஒலியுடன்**
**செல்வ வீதி செழுமணி தேரொலி**
**மல்ல யானை ஒலியுடன் மாஒலி**
**எல்லையின்றி எழுந்துள எங்கனும்**

**பொருள்:-** பலவகை வாத்திய விசேடங்களில் சத்தங்களோடு செல்வம் நிறைந்த திருவீதிகளிலே அழகிய தேர்களின் சத்-தமும் செழிய யானைச் சத்தமும் குதிரைச் சத்தமும் கூடிய அளவில்லாமல் அந்நகரமெங்கும் எழுந்துள்ளன.

**வி. உரை:- ஒலியுடன் -** இயக்கங்களின் (வாத்தியங்கள்) ஒலியை மற்ற தேர், யானை, குதிரைகளின் ஒலியிலிருந்து பிரித்து வேறுபடுத்திக் கூறுவர். ஒலி உடன் என்ற உருபு கொடுத்துக் கூறினார். யானை ஒலியுடன் என்ற இடத்தில் உடன் என்பது தேர்-யானை-குதிரை - என்ற சேனை முறைகளை ஒன்று சேர்த்ததாம். இச்சத்தங்கள் அவ்வவற்றின் வகைகளை உணர்த்துதலால் ஒலி என்றார்.

தேர்-யானை-குதிரை அரச அங்கமாகிய சேனைப் பகுதிகள் இந்நகர் சோழர்களின் இராசதானியங்களில் சிறந்ததாய் அவர்களது வாசத் தானமும் ஆகும். ஆதலின் இவற்றினது ஒலி மிக்கது.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் திருமுறைக் கருத்தரங்கு



சைவநெறியின் கருவூலமாகிய திருமுறைகள் தொடர்பான தெளிவுபடுத்தலையும், திருமுறைகளை இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகளையும், அடுத்த தலைமுறை ஆசிரியர்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது கட்டாயமாகும். அதனூடாகத் தான் அவை மாணவர்களை சென்றடையும். அந்தவகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில், கடந்த ஆடித் திங்கள் 11 ஆம் நாள் (26-07-2025) அன்று, மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள் **"பொன்னம்பலத்தில் இருந்து மின்னம்பலத்திற்கு"** என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கை நடத்தியிருந்தார்.

இந்நிகழ்வினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும், கல்லூரி இந்துமாமன்ற காப்பாளருமாகிய திருமதி. ஜானகி தர்மஜீலன் அவர்கள் ஒழுங்கமைத்திருந்தார். சரஸ்வதி கலையரங்க மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்லூரியின் பீடாதிபதி இராசையா யோகேஸ்வரன் அவர்கள், உப பீடாதிபதி பாலகணேசன் மற்றும் விரிவுரையாளர்களுடன் 360 மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.

திருமுறைகளை பாதுகாத்து வழங்கிய இராசராச சோழன், நாம்பியாண்டார் நம்பி ஆகியோர் வழியில் மறவன் புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்களும், திருமுறைகளை பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து, மின்னம்பலத்தில் ஏற்றி அனைவருக்கும் இலகுவாக கிடைக்கக்கூடிய வகையில் வழியமைத்துள்ளார். அவ்வாறான பெருமைகளையும் தகைமைகளையும் கொண்ட ஐயாவின் நெறிப்படுத்தலில் இவ்வாறான கருத்தரங்குகளை கல்விக் கூடங்களில் முன்னெடுப்பது ஓர் எடுத்துக்காட்டாகவும் போற்றுதலுக் குரியதுமாக அமைகிறது.

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமி திருவாசக அரங்கம் திறப்பு விழா





யாழ்ப்பாணம் நாவற்குழி திருவாசக அரண்மனை வளாகத்தில் புதிதாக அமையப்பெற்ற 'சிவபூமி திருவாசக அரங்க மண்டபம்', கடந்த 14-07-2025 அன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது. வைத்திய கலாநிதி சன்முகநாதன் அருந்ததி தம்பதிகளின் நினைவாக வைத்திய நிபுணர் மனோமோகன் சிவகௌரி தம்பதிகளால் நிறுவப்பெற்ற இந்த அரங்கம், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. ஆறு திருமுருகன் தலைமையில், வைத்தியநிபுணர் மனோமோகன் தம்பதிகளால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குனராசா அவர்கள் மற்றும் சைவ, சமூக அமைப்பினர் பலரும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வின்போது சிவபூமி திருவாசக அரங்க மண்டப திறப்பு விழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த மண்ணில் சைவத்தமிழ் பணிகளில் தொடர்ந்து சிறந்து விளங்கும் சிவபூமி அறக்கட்டளை அமைப்பினரின் இச்சிறப்புமிக்க மண்டபம், அவர்களது அர்ப்பணிப்பு நெறியினை வெளிப்படுத்தும் அற்புதமான ஒரு படைப்பாக அமைந்துள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

# அயர்லாந்து முருகன் திருக்கோயிலின் மூன்றாம் ஆண்டு நிறைவு








அயர்லாந்துத் தீவின் மத்தியில் அமைந் திருக்கும் அத்தலோன் மாநகரத்தில் 2022ம் ஆண்டு அமையப் பெற்ற அயர் லாந்து முருகன் திருக்கோயிலின் மூன்றாம் ஆண்டு நிறைவு சிறப்புப் பூசை வழி பாடுகள், கடந்த ஆனித் திங்கள் 21ஆம் நாள் (05-07-2025 சனிக்கிழமை) அன்று இடம்பெற்றது. இவ்வழிபாடுகளை தலைமை அருட்சுனைஞர் தென்னரசு - சோமசூரியசிங்கம் காண்டீபன் அவர்கள் தலைமையில் அருட்சுனைஞர் ரவிச்சந் திரன் வேலாயுதன், அருட்சுனைஞர் பிர தீசன் சேத்தரன் ஆகியோர் இணைந்து சிறப்பாக ஆற்றி வைத்தனர்.

திருச்சிற்றம்பலம்

---


# கொக்குவில் இந்துக் கல்லூரி அண்ணாமலையார் திருக்கோயில் ஆடிப்பிறப்பு வழிபாடுகள் (17-07-2025)








# சிவத்திரு. ந.சிவபாலகணேசன் ஐயா அவர்களின் சிவப்பேறு குறித்த செய்தி



சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி சிவத்திரு. ந. சிவபாலகணேசன் ஐயா அவர்கள் மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 29ம் நாள் (13-07-2025 ஞாயிற்றுக்கிழமை) தேய்பிறை மும்மை பிறை நாளில் சிவப்பரம்பொருளின் பாதங்களைச் சென்றடைந்தார்.

சைவசித்தாந்த பேராசனும், சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகளது தந்தையுமாகிய சிவத்திரு. ந. சிவபாலகணேசன் ஐயா அவர்கள், இலங்கை சைவநெறிக் கழகத்தின் ஆலோசகராக விளங்கி, மெய்கண்டார் சைவ சமய அறநெறிப் பாடசாலை தொடங்குவதற்கும், கொழும்பில் சைவசித்தாந்த கருத்தரங்குகள் நடத்துவதற்கும், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த பயிற்சி மைய வகுப்புக்களை மலையகம் மற்றும் யாழ்ப்பாணத்தில் தொடங்கி நடாத்தி வருவதற்கும் முக்கிய காரணமாகத் திகழ்ந்தவர்.

மேலும் சிவப்பிரகாசக்கதவம், உண்மை விளக்கக்கதவம் என்னும் நூல்களைச் சைவசித்தாந்த உலகுக்கு அளித்தவரும், திருவாவடுதுறை ஆதீன கொழும்பு சைவசித்தாந்த வகுப்பில் பலகாலம் கற்பித்து பலருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து, யாழ்ப்பாணத் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தின் தலைமைப் பேராசானாக விளங்கிச் சைவ சித்தாந்தம் தழைப்பதற்குத் தன்னையே அர்பணித்து நின்று, தவ வாழ்வு வாழ்ந்த பெருமாகனாரும் ஆவார். அத்துடன் கடந்த ஆண்டு தென்னாடு மார்கழிப் பெருவிழா நிகழ்வில், திருமுறை ஊர்வலத்தில் முன்னின்று பங்களித்து, திருமுறை ஓதி, விழாவுக்கும் வந்தவர்களுக்கும் அருள் சேர்த்தவர்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும் - குறள் 50**

நீத்தாரின் உயிர் உய்வடைய வேண்டி எல்லாம்வல்ல கொக்குவில் தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை ஐம்பூதநாதப் பெருமானிடத்தில் விண்ணப்பம் வைக்கின்றோம்.

**சிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்**
**சிவ சிவ என்றிடத் தேவரு மவார்**
**சிவ சிவ என்னச் சிவகதி தானே - திருமந்திரம்**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**திருச்சிற்றம்பலம்**




**தென்னாடு மார்கழிப் பெருவிழா திருமுறை ஊர்வலத்தில் திருமுறை ஓதல்-2024**

# யாழ்ப்பாண வாழ்வியலில் கந்தபுராண கலாசாரம்

**"முந்தொரு காலத்தில் மூவுலகம் தன்னில்**
**வந்திடும் உயிர் செய்த வல்வினை அதனாலே**
**அந்தமில்மறை எல்லாம் அடிதலைதடுமாறிச்**
**சிந்திட முனிவோரும் தேவரும் மருளாற்றார்"**

என்று இவ்வுலகில் வேத ஒழுக்கம் நெறியற்ற போது பரமேசுவரனின் அருளினால் திருமால் வேதவியாசராக தோன்றி வேதமறைகளை நெறிப்படுத்தி பதின்னெண் புராணங்களைத் தொகுத்தார். எனினும் வேதவியாசராலும் சிவபரத்துவத்தை முற்றுணரமுடியவில்லை. எனவே, வடமொழியில் அமைந்த கந்தபுராணத்தை கச்சியப்ப சிவாசாரியார் தமிழ்மொழியில் செவ்வினார். இதில் வடமொழிக் கந்தபுராணத்தில் பலவகையான மாற்றங்கள் பல்வேறு காலங்களால் நிகழ்ந்துள்ளவென்றும், தமிழ்மொழிக் கந்தபுராணமே மேலான இறைவாக்கு என்பதனைக் கச்சியப்ப சிவாசாரியர்,

**ஏதி லாக்கறப மெண்ணில சென்றன**
**ஆத லாலிக் கதையு மனந்தமாம்**
**பேத மாகுமப் பேதத்தி னுள்விரித்**
**தோது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன் - அவையடக்கம்**

என்னும் செய்யுளால் கந்தபுராண அவையடக்கப் பகுதியில் உணர்த்தியருளுகின்றார். சிவப்பரம்பொருளின் முற்றுண்மையை கந்தபுராணத்தில் காணலாம். பதி, பசு, பாசம் பற்றிய முற்றுண்மைகள் கந்தபுராணத்தில் விரிகிக் காணப்படுகின்றது.

சைவசிந்தாந்தம் என்பது சைவசித்து+ஆ+அந்தம். மெய்யறிவை ஆ ஆகிய பசு உணர்வதற்குறிய அந்தமாக அமைகின்றது. சைவசித்தாந்தத்தை முற்றுணர்ந்தோர் அசபை ஆயினர். வேதக்காட்சியான பாச ஞானமும் போதக்காட்சியான பசு ஞானமும் அவற்றிற்கு அப்பாலான ஞானக்காட்சி கந்தபுராணத்தில் பொதிந்து காணப்படுகின்றது.

**"வேதக்காட்சிக்கும் உபநிடத்துச்சியில் உதித்த போதக் காட்சிக்கும் காணலன்"**

கந்தபுராணபடனம் யாழ்ப்பாணத்தில் கோயில் திருவிழா தினங்களில் கந்தபுராண காலத்தில் இருந்தே வாசிக்கப்பட்டு வந்தது. இம்மரபினால் எமது முன்னோர் மெய்யறிவு கைவரப்பெற்று அறவாழ்க்கையில் திளைத்தனர். அஃதே யாழ்ப்பாணக்கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம் எனலாயிற்று.

எம்மண்ணில் சைவசித்தாந்த உணர்வை கந்தபுராணம் கடந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக காத்து வருகின்றது. பித்தன், பத்தன், முத்தன், அத்தன், தக்கன், நக்கன், புத்தன் என மானிட வாழ்வின் அம்சங்களை கந்தபுராணத்தில் தட்சகாண்டத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

கந்தபுராணத்தில் உற்பத்திக்காண்டத்தில் பதி தத்துவம் விளக்கப்பட்டுள்ளது. அசுர காண்டத்தில் மாயா தத்துவம் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. மா என்பது ஒடுக்கம் யா என்பது வருதல் என்று பொருள்படும். ஒடுக்கமும் மீள வருதலும் உலக நியதி. இதனுள் காலதத்துவம், நியதி தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன. அசுர காண்டத்தில், அண்டங்களின் எண்ணிக்கை அளப்பில என்பதும் அவற்றுக்கு அப்பாலும் ஆற்றல் உடையவன் ஆறுமுகன் என்றும் சிவப்பரம்பொருளின் வியாகபத்தினை அளவிட முடியாது என்பது விளக்கப்படுகின்றது. மகேந்திர காண்டத்தில் மாயையினால் உருவாகும் கலை வித்தைகளை மகேந்திர நகரின் அமைப்பிலும் சூரபத்மனின் அரசாட்சியிலும் காணலாம்.



**மருத்துவர் சி.யமுனாநந்தா**

ஆணவதத்தின் வலிமையினை யுத்த காண்டத்தில் முழுமையாகவும் தட்சகாண்டத்தில் தக்கனின் வேள்வியிலும் தாருகவனத்து முனிவர்களது வேள்வியிலும் காணலாம். சகலராகிய திருமால் பிரமாவின் ஆணவத்தை அகற்றி அருள உற்பத்திக் காண்டத்தில் வைரவப் பெருமானின் சிவப் பரம்பொருளின் இருதய தானத்தில் சிவஅம்சமாகத் தோன்றினார்.

**"பரமனை மதித்திடாப் பங்கயாசனன்**
**ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்**
**குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்**
**புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்"**
**உற்பத்திக்காண்டம் (14)**

தக்கனின் ஆணவத்தை அழித்து அருள சிவப்பரம்பொருளின் அம்சமாக வீரபத்திரரின் அவதாரம் உள்ளமை தட்சகாண்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் கஜமுகாசுரனின் ஆணவத்தை அழித்து அருள விநாயகப்பெருமானின் சிவஅவதாரம் தட்சகாண்டத்தில் கூறப்பட்டுள்ளது. சிவம் சத்தி என்பவற்றின் தகதான்மிய இயல்பும், நாதம், வித்து தத்துவத்தின் அதாவது ஓங்காரத்தின் பொருளும் தட்சகாண்டத்தில் விளக்கப்படுகின்றது.

**ஒருமையாலுணருவோருணர்வினுக்கு உணர்வதாம்**
**பெருமையால் எங்கணும் பிரிவரும் பெற்றியாள்**
**அருமையான் ஏவரும் அடி தொழுந்தன்மையான்**
**இருமையாம் ஈசனேய என்னநின்று அருளுவான்**
**கஜமுகன் (உற்பத்திபடலம் 149)**

தேவகாண்டத்தில் உலகவாழ்வியல் விபரிக்கப்பட்டுள்ளது. பிராரத்தவினைகளது தன்மை விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக பதிஞானம், பசுஞானம், பாசஞானம் தன்னை இனிய தமிழில் கந்தபுராணம் எமக்கு வழிகாட்டுகின்றது. ஊழி அழிவின் பின் மீளவும் மீளவும் பிரபஞ்சம் தோன்றுவதும் அப்பிரபஞ்சத்தில் நீக்கமற நிறைந்திருக்கின்ற திருவருளையும் அப்பிரபஞ்சத்தினைக் கடந்து விளங்கும் திருவருளின் அருளுருவத்தையும் ஆறுமுகனின் பேருருவக்காட்சி விளக்குகின்றது.

**முழுமதிஅன்ன ஆறுமுகங்களும் முந்தான்காகும்**
**விழிகளில் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்**
**அழகிய கரம் ஈராறும் அணி மணித்தண்டையார்க்கும்**
**செழு மலரர் அடியும் கண்டான் அவன் தவம் செப்பற்பாற்றோ**

இவ்வாறாகச் சைவசித்தாந்தத்தை ஆதாரமாக கொண்ட யாழ்ப்பாண வாழ்வியலை கந்தபுராணக் கலாச்சாரமாக கூறுவது மரபு.

# வானியல் நட்சத்திர (உடு/நாள்மீன்) அறிவியல் அடிப்படையில் பிறந்த நாள் கொண்டாடும் தமிழ் மரபு — சான்றுகளுடன் ஒரு சிறு விளக்கம்



அருட்குருநாதர் முனைவர் இராமகிருஷ்னன் சிவகுமார் (பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகம்)

**(கடந்த இதழ்த் தொடர்ச்சி)**

### 7. தமிழர் மரபில் நட்சத்திர பிறந்த நாள் கணிப்பின் சிறப்புகளை அறிவியல் நோக்கில் விளக்க இயலுமா?

உயிர்களின் உடற்கூறியல், உடலியங்கியல், மரபியல், குண இயக்கங்கள் அல்லது பண்புகள் போன்ற உயிரியல் மூலக் கூற்றுகளைக் கால சுழற்றிசைவு சீரியக்கத்தின் ( Circadian rhythm ) வழி ஆய்வு செய்யும் தற்கால உயிரியல் கடிகை (Chronobiology) எனப்படும் அறிவியல் துறை, தமிழர்கள் வளர்த்த ஆழ்புல நிமித்த அல்லது சோதிட அக்கால அறிவியலுக்கு நிகர் செய்வதையும், நாம் தற்போது அறிய முடிகின்றது. விரிக்க விரியும் என்பதால் விரிவஞ்சி சில எடுத்துக்காட்டுகள்:

i) சூரியனின் ஆறு பெரும்பொழுதுகள், சிறுபொழுதுகள் உயிர்களின் சுழற்றிசைவு சீரியக்கத்தை (Circadian rhythm) பெரிதும் தாக்குவது கண்கூடு.

ii) வளர் தேய் சந்திர திதி அல்லது பக்கல் சுழற்சி, மாத விடாய் சுழற்சி, உள உணர்வு நிலைகள், தூக்கம், குழந்தைகளின் நரம்பியல் வளர்ச்சி போன்றவற்றுடன் தொடர்பு உடையது. (Roenneberg et al., Nature Reviews, 2007), (Cajochen et al., Current Biology, 2013).

iii) கோள்கள், நட்சத்திரங்கள், கனையழலாகவும் (intense heat), கதிர்வீசுப்புலங்களாகவும் ( rays fields) , கரும் பொருளாகவும் (Dark Matter), ஈர்ப்பு அலைகளாகவும் ( gravitational wave), குவைய தாக்கமாகவும் (quantum effect) உயிர்களை வேவ்வேறு காலங்களில் தாக்குவதால், அவற்றின் சுழற்றிசைவு சீரியக்கத்தை ( Circadian rhythm ) பெரிதும் தாக்குவதை அறியலாம்.

### 8. நட்சத்திரப் பிறப்பில் பிறந்த நாள் கொண்டாடுவதின் தெய்வீக நோக்கம் என்ன?

தமிழர் நிமித்த சோதிட மரபில் நட்சத்திர நாள் நற்குறி காலங்களை வகைப்படுத்தி, நல் முழுத்தக் (முகூர்த்த) நிகழ்ச்சிகளையும், திருநாட்களைத் தேர்வுசெய்து திருவிழாக்களையும் கொண்டாடினர்.

i) **மேழ சித்திரைத் தமிழ் புத்தாண்டு : "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென"** - (சிலப். இந்திரவிழவூரெடுத்த காதை, 64), அவைதாம் - சித்திரை முதலாச் சென்மாத மிரண்டா -வைத்தனவெண்ணிக் கொள்கவென்ப. (நிகண். பிங்கலம் 212, சேந்தன் திவாகரம் 304)

ii) **திருவோணம் விழா: மாயோன் மேய ஓண நண்ணாட - மது. 591,**

iii) **கார்த்திகை திருநாள் : மதி நிறைந்து, அறுமீன் சேரும் அகல் இருள் நடு நாள் மறுகு விளக்குறுத்து, - (அகம்.141),** முழுநிலா வானத்தில் கார்த்திகை மீனை நெருங்கும் நள்ளிரவு நேரம். தெருவெங்கிலும் விளக்கு வைக்கின்ற கார்த்திகை திருநாள்

iv) **திருவாதிரை பெருவிழா: திருவாதிரை என்பது** ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் தோன்றும் திருவாதிரை நட்சத்திர நிகழ்வாக 'ஆருத்ரா தரிசனம்' என்று தமிழர்கள் கொண்டாடிவருகின்றனர்.

போன்ற பல்வேறு தெய்வீக விழாக்கள், நட்சத்திர நாள் தோன்றும் நற்குறி காலங்களாக கணிக்கப்பட்டு கொண்டாடப்படுகின்றன. அதுபோல நட்சத்திரப் பிறப்பில் பிறந்த நாள் கொண்டாடுவதை ஓர் உயிரின் உயிரியல் கடிகைக்கு (Chronobiology), உளவியல் இயக்கத்திற்கு புத்துணர்வு ஊட்டி, தீய விளைவுகளை அல்லது பாதிப்புகளைத் தவிர்த்து, தெய்வ அனுகூலங்களை வேண்டி, வேள்வி, வழிபாடு, தானம் போன்றவற்றை செய்யும் நாளாக தமிழர்கள் மேற்கொண்டனர்.

பிறப்பு நட்சத்திரம் காலம் உட்வேக ஆற்றலைக் (Energy empowerment) கூட்டும் நன்நாளாக அமைவதால் அன்றும் சிறப்பு பூசைகள், ஓகம், தியானம், நற்சடங்குகள், ஒன்றுகூடல் போன்ற நற்செயல்கள் நல்ல பலன் தரும் எனக் தமிழர்கள் கருதினர்.

### 9. பண்டையச் சங்கக் காலம் தொட்டு பிறப்பு நட்சத்திர பிறந்த நாள் கொண்டாடும் தமிழ் மரபு. சில எடுத்துக்காட்டுகள்:

1. மன்னனின் பிறந்த நாள் நட்சத்திரத்தில், பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படும் என்பதனையும், அன்று போர் தவிர்க்கப்படும் என்பதனையும். கீழ்க் காணும் முத்தொள்ளாயிரப் பாடல் உணர்த்தும்:

**கண்ணார் கதவந் திறமின் களிறொடுதேர்**
**பண்ணார் நடைப்புரவி பண்விடுமின் - நண்ணாதீர்**
**தேர்வேந்தன் தென்னன் திருவுத் திராடநாள்**
**போர்வேந்தன் பூசல் இலன். (முத்தொள்ளாயிரம்:7)**

சேரவேந்தன் ஒருவன் சதயநாளில் பிறந்தானாகையால் அன்று போர் நிகழாதென்றும், ஆதலின் பகையரசர் மதிற் கதவு திறந்து மகிழ்ச்சியோடிருக்கலாம் என்றும் பிறிதொரு பாடல் குறிப்பிடுகின்றது.

**நின்று நிலைஇயர் நின்நாண்மீன், நில்லாது**
**படாஅச் செலீயர் பகைவர் மீனே (புறநானூறு : 24: 24-25)**


என்ற புறப்பாட்டு அடிகளின் விளக்கம், ஒருவர் பிறந்த நாளன்று விண்ணில் மதிநின்ற இடத்திலிருந்த மீன் தான் நாள்மீன் எனப்படும் என்பதனைத் தெரிவிக்கின்றது.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்ட வந்த புலவர் மாங்குடி மருதனார், சேர மன்னனொருவனின் பிறந்தநாள் விழாவின் மகிழ்ச்சி ஆரவாரத்தினை உவமையாக எடுத்துக் கையாண்டு பாராட்டியுள்ளார். பிறந்த நாளன்று சேர மன்னன், கூத்தரும் சுற்றத்தினரும் ஒருங்கே வாழ்த்த, எல்லாக் கலைகளையும் உணர்ந்த பல சமயத்தவர் மாறுபட்டுக் கூறும் சமய தருக்க வாதங்களை விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தான் என்ற குறிப்பு மதுரைக்காஞ்சியால் பெறப்படுகின்றது.

**கொடும்பறைக் கோடியர் கடும்புடன் வாழ்த்துந்**
**தண்கடல் நாடன் ஒண்பூங் கோதை**
**பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ**
**விழைவு கொள் கம்பலை கடுப்ப"**
**(மதுரைக்காஞ்சி : 523-526)**

2. மேலும் அந்நூலிலேயே நன்னன் என்னும் குறுநில மன்னனின் பிறந்தநாள் விழாவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

**".................................. சேரிதோறும்**
**உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ**
**வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப்**
**பேரிசை மன்னன் பெறும்பெயர் நன்னாள்**
**சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு"**
**( மதுரைக்காஞ்சி : 615 - 619)**




**சூரிய-சந்திர-நட்சத்திர (உடு) கணிய முறையில்** (Lunar-Solar-Sidereal Prediction) **கட்டமைக்கப்பட்ட தமிழர் ஓரை அறிவியல்** ( Tamilar Zodiac Science ) **(இரா.சிவகுமார்.2023**b**).**

*என்ற மதுரைக்காஞ்சிப் பகுதியால் முடியுடை வேந்தருடையதேயன்றிக் குறுநில மன்னரின் பிறந்தநாள் விழாவும் பழந் தமிழகத்தில் கொண்டாடப்பட்டது எனத் தெரியவருகின்றது. (நன்றி : சி. பாலசுப்பிரமணியன்,1977).*

3. *முதலாம் இராசராச சோழன்* (Rajaraja I) *பொ.ஊ. 985 முதல் பொ.ஊ. 1014 பிறப்பு விழா: இவர் பிறந்த நாளில்* **திருமுதுகுன்றம் உடையார் கோவிலில் திருவாதிரை நாளில்** *திங்கள் தோறும் சிறப்பு வழிபாடுகள் செய்யவும், விழாக் கொண்டாட நிலம் அளிக்கப்பட்ட செய்தியையும் விருதாச்சலத்தில் உள்ள கல்வெட்டொன்று கூறுகிறது. ( சோழர்_வரலாறு* Wikisource, *2025)*

## 10. பிறப்பு நட்சத்திர பிறந்த நாள் சிறப்பினைச் சுருங்க காண்போமானால்:

*நட்சத்திர பிறந்த நாள் என்பது, தமிழர்களின் நுட்பமான சூரிய-சந்திர-நட்சத்திர (உடு) மண்டல* (Lunar-Solar-Sidereal Prediction) *ஐந்திர அல்லது பஞ்சாங்க அடிப்படையில் கொண்டாடப்படும் ஒரு நாள். ஒருவரின் உளவியல் புத்துணர்வாக்கத்தை, உடல் சுழற்றிசைவு சீரியக்கத்தை* (Circadian rhythm) *மீளச்செய்யும் நாளாக பார்க்கப்படுகிறது. எனவே, அந்த நாளில் சிறப்பு பூசைகள், நற்காரியங்கள், தியானம், சடங்குகள் செய்யும் போது தெய்வீக உணர்வை மேலிடச்செய்து, ஒருவரின் சத்தி நிலையை சீராக்கலாம் என தமிழ் மரபும், தற்கால உயிரியல் அறிவியல் நுணுக்கங்களும் உறுதி செய்கின்றன.*

## 11. சிந்தனைக்கு

*சிந்திக்க விடாது தடுப்பதற்கு ஆயிரம் வழிகள் உண்டு ஆனால் மெய்ப்பொருள் காண்பதற்கு ஒரே வழி, ஊழ்ந்து (முதிர்ந்து) வெளிப்பட்டு நிற்கும் உண்மையொடு ஊர்ந்து செல்வதே*, 'Uṇmaiyodu ū ūliyasē (un-mey-da u-ul-li-a se )' Sumerian Tamil B.C 2094 –2047 Sulgi's Hymn B *'உண்மையொடு ஊ ஊழியசே' சுமேரிய தமிழ் கி.மு 2094 -2047 சூல்கியின் பாசுரம் நம்முள் உண்மை ஊழ்ந்து (முதிர்ந்து) இசைய (அசைய) என்றுமே அதனோடு ஊர்ந்து செல்வோம்.* Let our psyche always resonate and crawl together with TRUTH as destiny which arising from our inner self. *மறித்து மறித்தும் மரியா வண்ணம் உரித்து நிற்பது உண்மை*

**மேற்கோள்கள்**


*1.* Roenneberg, Till et al. *(2007).* The human circadian clock entrains to sun time. Nature.

*2.* Cajochen et al. (2013). Evidence that the lunar cycle influences human sleep. Current Biology.

*3.* Dr. B.V. Raman. Studies in Astrology.

*4.* Taittiriya Brahmana> Surya Siddhanta – for Vedic time computation.

*5. சூரியக் குடும்பம் (2009).* Wikipedia, the Free Encyclopedia. Available at: **https://ta.wikipedia.org/wiki/**சூரியக்குடும்பம் (Accessed: 16 May 2021).

6. Star Constellations: The Zodiac (2017). Astronomy Trek. Available at: **https://www.astronomytrek.com/star-constellations-the-zodiac/** (Accessed: 13 August 2020).

7. *இரா. சிவகுமார். (2023*a*). தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 1: புறக்காலத்தியல்* (Tamilar Hermeneutic Logical Wisdom of Time Volume 1: Physical Time). Siva Publication, A-8, Cheran Nagar, Coimbatore – 641029, Tamil Nadu, India.

8. *இரா. சிவகுமார். (2023*b*). தமிழர் கால ஏரண மெய்யறிவு தொகுதி 2: அகக்காலத்தியல்* (Tamilar Hermeneutic Logical Wisdom of Time Volume 2: Psychological Time). Siva Publication, A-8, Cheran Nagar, Coimbatore – 641029, Tamil Nadu, India.


9. *சோழர் வரலாறு (2025).* Wikisource. Available at: https://ta.wikisource.org/wiki/*சோழர் வரலாறு /இராசேந்திர சோழன்* # cite_ref-1 (Accessed: 23 June 2025).

10. *சி.பாலசுப்பிரமணியன் (1977). இலக்கிய அணிகள் (ஆராய்ச்சிக் கட்டுரைகள்).* Available at: **https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0712.html** (Accessed: 23 June 2025).



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# 60th Edition Of Our Thennadu Newspaper

This edition marks a significant milestone, the 60th edition of our Thennadu news paper. By Gregorian measure, that means we have completed five full years of continuous publication, dedicated to sharing, preserving, and celebrating traditional Saiva Tamil practices through thoughtful articles and reflections.

Each month, Thennadu has delivered bilingual content in both Tamil and English, ensuring that knowledge rooted in our Saiva scriptures, traditions, and cultural heritage reaches Tamils across India, Sri Lanka, and the broader global diaspora. Our goal from the beginning has been simple but urgent: to protect and promote the richness of Tamil Saiva knowledge so that it is not lost, but instead lives on vibrantly in the hearts and minds of our people, young and old alike.

We hope our efforts have meaningfully contributed to that mission. And we remain committed to producing content of the highest quality in every future edition, further educating and inspiring our readers.

In particular, the English sections of ThenNadu have played a key role in helping young diasporic Tamils engage with their roots. Many Tamil youth raised abroad often struggle to access the deeper meanings of Tamil Saiva texts due to language barriers. Our English articles, offering translations, explanations, and thematic explorations, serve as a bridge between generations. They provide a smoother pathway for youth to understand and embrace their culture, ultimately empowering them to carry forward our traditions with confidence and pride.

Above all, this newsletter has continuously championed the belief that the Tamil language must be central to Saiva rituals. It is through Tamil that the truths of the Thirumurais, Sathirangal and other Tamil literatures have been passed down, and it is Tamil that must continue to ring through our temples and our homes.

As we celebrate this 60th edition, let us take a moment to reflect on how far we have come and renew our shared commitment to sustaining and sharing the precious legacy of Tamil and Saivam for generations to come.

# Saiva Saint Kannappa Nayanar - The Instinctive



Among the sixty-three Nayanmars, Kannapar's story, 9th in order, remains one of the most arresting for its liturgy paradox: a worship so brief in time, yet boundless in intensity. His devotion is not recorded through long years of temple service or meticulous adherence to canon, but in the sudden eruption of a soul recognising its source, the potency of which lay not in its intellectual design but in the uncalculated originality of a soul creating worship at the very moment of encountering the divine. Kannapar embodies a universal truth that transcends sect and system, the measure of worship lies not in duration or form, but in the absolute surrender of the self.

## Background

The saint, Thinnan, was the son of Nagan, the chieftain of the hunters in the Uduppur hills near Sri Kalahasthi, 'Potthappi' to be precise. His life was carved by the forest, where survival honed sharp focus and unflinching absolute courage. Accompanied often by his close companions Nannan and Kadan on hunts, Thinnan lived by instinct, his world bound to the bow and the pulse of the wilderness of Kalahasthi, hunting his days away zestfully.

It was on one such hunt that destiny turned. Pursuing a pig through thick woodland, Thinnan stumbled upon a lonely shrine of Sivaperuman, its weathered lingam quietly commanding the space. At that instant, the hunter's nature shifted from pursuit to prostration. The bow lowered; instinct transmuted into reverence. He did not see stone. His holiest of holy eyes

perceived a pulse, a presence. In that instant, the axis of his being shifted. The suddenness of his devotion is not the randomness of obsession, it is the inevitability of recognition. This moment, unprepared and unmediated, became the spark of a worship not inherited but invented. A ritual synthesised from love itself! Nannan, having witnessed this shift, revealed to the saint that this was Kudumi Nathar peruman's shrine.

## The Techniques of an Untutored Ritual

Kannapar's worship is remarkable not because it was elaborate, but because it was raw. Without guidance from priestly institutions or ritual texts, he enacted the essential grammar of devotion. Carrying water in his mouth to bathe the lingam was neither ignorance nor accident. Rather, it was instinct. In using his own body as the vessel, Kannapar performed what later theology would identify as the highest offering: the devotee as the medium of sanctification.

The flowers he carried in his hair were not arranged in ritual sequence; they were pressed close to his head, mingled with breath and sweat. When he placed them upon the deity, he unknowingly fulfilled the deepest aim of ritual adornation, that is to crown the divine with the unmediated fragrance of one's own being. His acts were not a rejection of formalism but an emergence of its primal human origin, ever before when liturgy and 'Aasaaram' became codified.

This explains his intuitive grasp of ritual significance. The sacred bathing of the idol was not learned from text; it arose from the human instinct to purify what is revered. The adornation of flowers was not imitation of temple custom; it was the natural human urge to crown and adorn what is loved.

## The Test

The defining moment came when Thinnan found the lingam bleeding from one eye after a mere 5 days. Without scriptural knowledge to lean on, he acted with unfiltered devotion, plucking out his own eye and placing it over the wound. When the second eye of the deity bled, he prepared to offer the other, using his toe to mark the exact position so that his gift would not falter even in blindness.

Hidden behind the shrine as commanded by the Lord in a dream, the temple priest watched this unlettered hunter enact the supreme sacrifice. The event reaching its zenith, divine command shook the sanctum. "Stop, Kannapa!" repeated thrice.

With those words, the blood ceased, the shrine radiated grace, and a saintly name was born, etched forever in the heart of Saivite history.

## Remembrance

Kannapar's story is not merely a legend of sacrifice; it is the birth of a new pedagogy of worship. In a handful of acts, he demonstrated that true ritual does not depend on time, lineage, or instruction but on the immediacy of surrender. His ephemeral devotion carries infinite depth because it did not imitate, it originated! In him, love became law, and the body itself became scripture. He is remembered through the Panchapuranam many a time and predominantly through the Periya Puranam. His story is passed down with prostration from the entire saivite clan on his guru poosai day, on Thai - Mirugasirisam. May Kannappar's tribe increase.

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆடிமறைமதி வழிபாடுகள் (24-07-2025)



சுந்தரர் குருபூசை (01-08-2025)



வைத்திய நிபுணர் மனோமோகன் சிவகௌரி தம்பதிகள் தென்னாட்டில் வழிபாடு (11-07-2025)



யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் புதிய அதிபரைக் கௌரவித்தல் (14-07-2025)



ஆடிப்பூர நன்னாள் வழிபாடுகள் (28-07-2025)

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆனித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (10-07 -2025)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபதாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 23ம் நாள் நிறைமதி அன்று (08-08-2025 வெள்ளிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org